148098

சீங்கீதத்
கலியாண நாடகம்

O-2 ന്മൊ3,5
N18
148098

087

உ

கடவுள் துணை.

# சிங்கீசர்
# கலியாண நாடகம்.

இஃது

திண்டிவனம்தாலூக்கா

மைலம் மதுராப்பாளயத்திலிருக்கும்

உபாத்தியாயர்

**துரைசாமி முதலியார் அவர்களால்**

எழுதியதை,

**கை. சு. துரைசாமி முதலியாரிடம்**

ரிஜிஸ்டர் பாத்தியதையைப் பெற்று

அமரம்பேடு

**முத்துவடிவேலுமுதலியார் அவர்களால்**

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

ஸ்டர்ட் காபிரைட்.

27 SEP 1918
MADRAS

உ

கணபதிதுணை.

# சிங்கிசர் கலியாண நாடகம்.

இஃது

திண்டிவனம் தாலுக்காவைச்சேர்ந்த மைலத்திலிருக்கும்,

ம-ா-ா-ஸ்ரீ அண்ணாமலை முதலியார் குமாரன்,

துரைசாமி முதலியாரால்

ஏட்டுப்பிரதிகொண்டு எழுதி முடிந்ததை

---

கை-சு. துரைசாமி முதலியாரிடம்

ரிஜிஸ்டர் பாத்தியதையைப் பெற்று,

---

அமரம்பேடு

முத்துவடிவேலு முதலியாரால்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

விலை] ரிஜிஸ்டர் காபிரைட். [அணா-5.

27 SEP 19[illegible]
MADRA[illegible]

1921
694-812

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# விளம்பரம்.

---

இதனால் அனைவருக்கும் தெரிவிப்பது யாதெனில், இதிற்கண்டுள்ள புத்தகங்களும், இன்னும் வேண்டிய எல்லாவித புத்தகங்களும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசதாரரிடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| வல்லாள மகாராஜன் நாடகம் | 0 | 8 | 0 |
| நரகாசூரன் சண்டை நாடகம் | 0 | 5 | 0 |
| கம்ச சம்மார நாடகம் | 0 | 5 | 0 |
| கமலவல்லி நாடகம் | 0 | 5 | 0 |
| மாங்கனி நாடகம் | 0 | 3 | 0 |
| இராமாயணக் காவடிச்சிந்து திருப்புகழ்மெட்டு | 0 | 2 | 0 |
| சம்பூர்ண பாரதக்காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| மாம்பழக் கும்மி | 0 | 1 | 0 |
| சம்பந்தி பரியாசபாடல் | 0 | 2 | 0 |
| உப்புமா பாட்டு | 0 | 1 | 0 |
| நந்தனர் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| கொசுவுக்கும் மூட்டபூச்சிக்கும் தர்க்கம் | 0 | 1 | 0 |
| தென்னைமரத்துக்கும் வாழைமரத்துக்கும்சண்டை பனைமரம் மத்தியஸ்தம் | 0 | 1 | 0 |
| வள்ளியம்மைசுயம்வரம் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |

இன்னும் அநேகவிதமான நூதனபாடல்கள் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

அ. முத்துவடிவேலுமுதலியார்.

நெ. 24. தாண்டவராயப்பிள்ளைவீதி,

சவுகார்பேட்டை மதராஸ்.

148098



உ

கணபதிதுணை.

## சிங்கீசர்

# கலியாண நாடகம்.

காப்பு.

சீர்புகழுமூவுலகு மேத்துகங்கை
சிவபெருமான்விவாககதை புவியோர்கேட்க
பார்புகழுஞ்சுத்துக்கே ணிக்கடுத்தகீழ்பால்
பரிவானபுதுவைநகர் தனிலிருக்கும்
கார்புகழுங்கவிஞரெலாம் பதம்வணங்கும்
கலைவாணிதிருவடியைக் கருத்தில்வைத்து
பேர்புகழும்சிங்கீசர் நாடகமாய்ச்செய்ய
பேழைவயிற்றோன்பதத்தைச் சிரமேற்கொள்வாம்.

மகாவிஷ்ணு-விருத்தம்.

ஆதியம்வைகுந்தம் அமர்ந்தநாதன்
அசுரர்களைவேரறுத்த அகிலபாதன்
நீதியுடன்பிர்மனையு மீன்றநீதன்
நேயர்களைரக்ஷிக்கும் நித்யபாதன்
கதிர்பெருகும்லக்ஷுமியைச் சுமந்தமார்பன்
கவிஞர்களுக்குகவிதரும் கமலக்கண்ணன்
விதிமுறையும்மதியினால் அகலவைப்போன்
விஷ்ணுவுமேகொலுவாக வருகின்றாரே.

## மகாவிஷ்ணு தரு.

ஆதிவைகுந்தவாசநேசன் அடியார்களை
அருள்தந்துரக்ஷிக்கும் விஸ்வாசன்
சோதித்தகதிர்போலொளிர்சுமந்த லட்சுமிவாசன்
சுந்தரசோதன்விதரண அந்தராமன்
  ரூக்ஷாய்க்காக்ஷி தந்திடும்நாதன்
  ஆக்ஷியாய்பதவி அளித்திடும்தேவன் ஆதி

ஆயிரத்தெட்டண்டமாண்டதுங்கன் இரணியனை
அகோரங்கொண்டுடல்கிழித்த சிங்கன்
பாயாகபூமிதன்னை பரித்தகண்டகன் தன்னை
பன்றியுமானேன் அவனுயிர்கொண்டிட லானேன்
  பாலனும்பிரகலாதன னுக்கேவரம்
  சாலோகபதவியும் சாயுச்சியமளித்தேன்

அலைகடல்தனைக்கூடிக்கடைந்தார் தேவர்களெல்லாம்
ஆதிசேஷனைபிகிந் திழுத்தார்
மலைக்குப்பெரிதாகிய மந்திரகிரியைமத்தாய்
மதிதனைவைத்தேன் ஏனமாய் முதுகினில்சுமந்தேன்
  சிதரிடவிஷமது சீரியேவருக
  பதரிடபரமனும் பட்சணம்செய்தார் ஆதி

பரமன்விஷத்தையுண்டுக் கக்க அசுரர்களும்
பாகம்பிரிக்கமனம் ஒக்க
தீறமாய்மோகினிரூபம் தீறர்முன்னெதிர்ப்பட
தியங்கியேநின்றார்மனது மயங்கியேசென்றார்
  பயமுடன்ராட்சதர் தூள்படமடிக்க
  செயமுடனமுர்தம் சிறப்புடனளித்தேன் ஆதி

## மகாவிஷ்ணு-விருத்தம்.

அதிதிக்கிளையவளாம் சுரூபியென்னும்
  அவள்வயிற்றில்அசுரர்களும் பிறந்தார்முத்தி
மதிதனையுமேனமதாய் வைத்துதேவர்
  மந்திரகிரியதனை மத் தாகநாட்டி
கதிரோனுக்காகாத சேஷன்தன்னை
  கவிஞர்களுக்குதவிதரும் கமலக்கண்ணன்
திரில்லா விஷமதுவும் வெளியதாக
  யீசனுண்ணுங்கண்டமதில் அமுர்தமாமாமே

9

வசனம்

கேளும் மாதவா, முன்னாளில் அதி திதியென்னும் இருவர் வயிற்றில் இந்திரன்முதல் முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிறந்தார்கள். சுருபியின்வயிற்றில் அசுராதிகள் பிறந்தார்கள். ஆசாரம் தெய்வபக்தி யேற்படும்படியாக திருப்பாற்கடலில் மந்திரகிரியை மத்தாகநாட்டி ஆதிசேஷனைக் கயிறாகப்பூட்டி சந்திரனை யேனமாக வைத்து அசுரர்கள்ஒருபுறமும் தேவர்கள் ஒருபுறமுமாகக் கடையும்போது ஆதிசேஷனுக்கு மனந்தாளாமல் விஷத்தைகக்க, அந்த விஷமானது சீறி எழுந்து வருகிறபோது பரமசிவமானவர் விழுங்கினார். அவர் விழுங்கினபோது அமுர்தமாகிவிட்டது. அந்த அமுர்தத்தைப் பாகம்பிரிக்கவேண்டுமென்று அசுராதிகள் இருக்கும்போது நான்மோகினி ரூபங்கொண்டு அசுராதிகளைக் கருவறுத்து தேவர்களுக்கு அமுர்தம் பாலித்தோமடா மாதவா.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக பகவானானவர் வைகுந்தத்தில் கொலுவாக வீற்றிருக்கும்போது நாரதமகாமுனிவர் வைகுந்தம் நாடி வருவது காண்க.

நாரதர் கவி.

மறைமிகுகலைநூல்வல்லோன் வானவர்க்கரசன் மைந்தன்
சிரசிற்குல்லாவும்பூண்டு சிவபெருமானைப்போற்றி
பரிவுடன்குறடணிந்து பலவரைக்கலகம்செய்யும்
நரைதிரைநீக்கிநின்ற நாரதர்வருகின்றாரே.

நாரதர்வருவது-தரு.

நாரதமுனிநானே வேதமறிந்த நாரதமுனிநானே
நாரதமுனிநானே நல்லோர் பொல்லாங்குசெய்வேன்
நாட்டினேன்ஒரு சேதியதனையும்
வாடிடசிவன் மோடிசெய்குவேன் நாரதமுனி
இன்றையதினத்தில் சேதிஇல்லையே கலகம்செய்ய
இருமாப்புக்கொண்டவர்க ளில்லையே
காளையேருமீசன் கங்கையைத்திருடினதை
விரித்தேன்விஷ்ணுவினிடம் பரித்தேன்நான்குவேதத்தை
தரித்தேன்அவன்சிரத்தை முரித்தேன்பொடிபட நாரத

பரப்பிர்ம்மசொரூபரிடம்செல்வேன்     இதோ நொடியில்
பரமன் திருடினதைச்சொல்வேன்
உறம்பெற்றான்பகிரதி உண்மையின்றோடறிவேன்

உம்பர்வானவர்களும் அன்பாறியும்படி
தென்புகுலையசிவன் வம்புவழக்காய்     நாரதமுனி

நாரதர் தேசவிசாரணை.

திரண்டகோதண்டவை     குந்தகிருநேசனே
செவ்வேநான்     உமதுசரணம்

மகாவிஷ்ணு சொல்

திரிலோகமெங்கும்     சஞ்சரிக்கின்றமுனிவனே
செல்வனேநீ     வாழிவாழி

நாரதர் சொல்

அரிகரிவைகுந்தா     கைலாசபெருமையும்
அவமானமிழி     வாச்சுதே

மகாவிஷ்ணு சொல்.

ஆரடாமுனிவனே     அவமானமென்கிறாய்
அறிந்துரையுமென்     சமுகமே

மகாவிஷ்ணு வசனம்

கேளும்பிள்ளாய் நாரதமுனிவனே, கைலாயமும் வைகுந்தமும் அவமானத்தில் அடங்கியிருக்கிறதென்று சொன்னாயல்லவா அதை எனக்கு விபரமாகத் தெரியச்சொல்லும் முனிநாதனே

நாரதர் தரு

அண்டரண்டம் பிரம்மாண்டம் உண்டமாயனே
ஆதிகைலாசம்சென்று வருகும்வழியில்
மண்டலத்திலுள்ளரிஷி யோர்களுங்கூடி
மயேஸ்பரனைக்கேலிசெய்த வார்த்தையென்சொல்வேன்
அகஸ்த்தியர்மரீசரிஷி அங்காரர்கூடி
அரன்சடையில்பெண்ணுயென் யிருக்குதுயென்றார்
பகவதிபராசத்தியாள் தானறியாமல்
பவானியைமறைத்தாரென்றார் பராசரிஷியும்
கண்டங்கருப்புடைய கையிலாசநாதரை
கர்த்தனென்றும் இனிசொல்ல லாகுமோவென்றார்

விண்டலம்படைத்தூந்தியில் அயனையீன்றிடும்
விஷ்ணுவின் மகளாமென்றூர் விமலரிஷியும்
சத்திசிவனுலுலகம்கெட்டுதே யென்று
சர்வலோகசத்தரிஷி முனிவர்சொன்னுரே
உற்றசேதிநானுரைத்தேன் உலகமுண்டவா
இதைஉண்மையென்றறிந்துக்கொள்ளும் உலகமாதவா அ

நாரதர் வசனம்.

கேளுமையா சுவாமி பகவானே கைலாயத்திற்சென்று சத்தரிஷிகளும் கூட்டங்கூடி கலந்துவருகின்றபோது முக்கண்படைத்த பரமசிவத்தைக் கேலிசெய்யவும் ஊனர்களென்று சொல்லவும் எற்பட்டது எதினுலேயென்ருல் கங்கையம்மனைக் கொண்டுபோக சடாபாரத்தில்வைத்து இருப்பதினுலே இந்த அவமானமெல்லாம் நடந்துதையா சுவாமி.

மகாவிஷ்ணு விருத்தம்.

இந்தவிதம் நாரதரும் நவிலக்கேட்டு
யேங்கியே வைகுந்தர் யேக்கமாகி
எந்தனிட குமாரியினுல் இழிவுமாச்சு
இவ்வுலகில் முனிவர்களும் நகைக்கலாச்சு
விந்தையுடன் பரமருக்கு விவேகமில்லை
வெளியிட்டுநாமுரைத்தால் சுகமுமில்லை
அந்தமுள்ளலட்சுமிக்கு உரைக்கவேண்டும்
அரண்மனை தனைச்சென்று அழைத்திடாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் மாதவா, நமது குமாரத்தியான கங்கையம்மனுல் உலகத்தோர் பழிப்பாகச் சொல்லவும், நம்மையும், இகழ்ச்சியாகப் பேசவும் இருக்கின்றது. இந்த சேதிகளை இலட்சுமிக்கு அறிக்கையிடவேண்டும், அரண்மனைக்குச்சென்று அதிக சீக்கிரத்தில் இலட்சுமியை அழைத்துவாரும்பிள்ளாய் மாதவா.

இலட்சுமிதேவி கவி.

அலைகடலவதரித்த ஆதிலட்சுமியாள்தானும்
கலைதனையெடுத்துடுத்தி காலில்தண்டைகளுங்கொஞ்ச
மலைதனைசிலைவளைத்த மாயனுமழைத்தாரென்று
நிலையது அறிந்து ஆதி லட்சுமிவருகின்றுளே.

## இலட்சுமிதேவி தரு.

அரிவை அமரர்குண திருவேமிகுலய்யாரி
ஆதிலட்சுமியும்வந்தாள் பலபணிகளுமின்ன
ஆதிலட்சுமியும் வாராள்
மருவுமல்லிகைமுல்லை வாடைப்பரிமளங்கள்
வாசமலரணி வீசுங்கெந்தமும்
பூசும்வெகுவித நேசரைக்காண அரி
முத்துபுட்பராகமும் நெற்றிசுட்டியுமின்ன
முகசந்திரகாந்தி வீசவே
முராரியின்மார்பில் திகம்பரியானேமே
உத்தமவைகுந்தவாசர் சித்திரத்தாதியைவிட்டு
உருக்கங்கொண்டவர் பெருகிசபைதனில்
அருகிலழைத்திட வருகநடந்திட அரி
சித்திரப்பதுமையைப்போல் செகரட்சகியாளென்ன
செம்பொற்கடகந் துன்னவே
கையில்வளையது கலகலகலவென்ன
அம்புவியோர்கள் பன்ன
சுத்துங்கேணிக்குக்கீழ்பால் வெற்றிப்புதுவைநகர்
புகழ்புகழ்வன்னியன் நிகழ்த்துங்கவியதனை
புகழுரட்சகி மிகவுமேவந்தாள் அரி
வறுமையகற்றிசெல்வம் பெருமைதருலட்சுமி
வந்துகீர்த்திகளோங்கவே யேழைக்கிரங்கி
சிந்தைமனங் களிக்கவே
சிறுமைப்பெறுவார்கோடி பெருமையடைவார்நாடி
செகத்ரட்சகி மகிதலலட்சுமி
சுகமுர்தந்திட மிகவும்மகிழ்ந்திட அரி

## இலட்சுமிதேவி கந்தார்த்தம்

அரவின்மேற்றுயின்ற அநாதிரட்சகரே
கரிதனைக்காத்த கமலனேபோற்றி
பாவியேயீரேழுலக முண்டவரப்பிரசாதா.

## தரு.

மாயனே சரணம் எனை அழைத்த நேயனே சரணம்
மாயாவுன்திருவடி சேயிழைபோற்றினேன்
காயாம்பூவண்ணனே வாய்திறந்துரைத்திடும் மாயனே

13

இலட்சுமிதேவி வசனம்.

சரணம் சரணமையா சுவாமி பிராணநாயகா அடியாள் அநேக வந்தனம் என்னை அழைத்த விபரம் இன்னதென்று திருவுளம்பற்றி அருள்செய்யவேண்டுமையா சுவாமி.

மகாவிஷ்ணு கந்தார்த்தம்.

மங்கையென்பிராண மாதேநீவாழி
சங்கரன்செய்த சர்ப்பனையாலே
அங்காரமரர்ரிஷி யாவரும்நகைக்க
நங்கையென் குமரியால்

தரு.

கனமிழந்தேனே உலகமெலாம் மனமிழந்தேனே

பங்கையனென்று பலபேர்தொழுதிட
எங்கெங்கும் முனிவருமேளிதம்செய்திட (கனமிழ)

மகாவிஷ்ணு வசனம்.

கேளும் பெண்ணே பிராணநாயகி, சிங்கீஸ்வரன்செய்த வஞ்சகத்தினால் ரிஷியோர்கள் எல்லாம் கேலிபாக சொல்லவும்நமது குமாரத்திகங்கையினாலே கனமிழந்து யேங்கலானேன் பெண்ணே பிராணநாயகி.

இலட்சுமிதேவி தரு.

கங்கைமேல்பழுதுண்டா நாதா பிராணநாதா
கடிந்துரைதந்ததென்மேல் வாதா இதென்னவாதா

சிங்கீசர் முடிமீதில் தங்கும்என்மகள்மேலே
அங்கீசரிஷியவன் பங்கமுரைத்ததென்ன (கங்கை)

மகாவிஷ்ணு தரு.

சிங்கத்தின்மேல்ஆனையேருமோஅது யேருமோஉலகில்
சிலபோவாய்தன்னைமூடலாகுமோ மூடலாகுமோ

பரனீசன்முடிமீதில் பாவையேன்யிருக்கின்ருள்
எந்த முனிவராலே யேளிதமாச்சுதே (சிங்கத்)

இலட்சுமிதேவி தரு.

நெருப்பைஅவிக்கசலம் வேண்டுமோ சலம்வேண்டுமோ
அதுபோல்நெத்திக்கண்ணுக்குகங்கைதோனுமோஅதுதோனுமோ

இருப்பையறியாமல் யென்னசொல்லுவார்முனிவர்கள்
வெறுப்பாகசிவன்மீதில் வீண்பழியினிவேண்டாம் (நெ)

மகாவிஷ்ணு தரு.

குருடற்குகோல்கோணை தெரியுமோ கோணை தெரியுமோ
குருமுனியோர்க்குசேதி தெரியுமோ சேதி தெரியுமோ

பரமன்பகிரதியால் பழியாச்சே வழிவாச்சே
உருவைபராசத்தியாள் ஒன்றும் அறியாளே (குருடற்கு)

இலட்சுமிதேவி கவி.

பராசத்தியறியாளென்ற பங்கயஜயனுகேளும்
தராதலமறிவதாக சங்கரன் தனையழைத்து
கரார்செய்துசங்கரச்குக் கடிமணமுடிக்கவேண்டும்.
அராகந்தமுனிவோரெல்லாம அறிந்திடநடத்துவீரே

வசனம்.

கேளும் சுவாமி பிராண நாயகா பவானியைக்கொண்டு போய் சிங்கீஷ்வரரிடத்தில் சடாபாரத்தில் மறைத்துவைத்திருப்பதை சத்தரிஷிகளும் பராசத்தியும் அறியமாட்டார்கள் அவர்களெல்லாம் அறியும்படியாக சிங்கீஸ்பரரை அழைப்பித்து கங்கையம்மனுக்குவிவாசம் நடத்துமையா சுவாமி.

மகாவிஷ்ணு தரு.

தங்கைசம்மதிப்பாளோ கங்கையைமணஞ்செய்ய நாரதனே
பொங்கிவிழுவாளே நங்கையறிந்தாளானால் நாரதனே

நாரதர்-தரு.

பங்கம்போகுதென்று அங்கங்கட்டுவாருண்டோ ஸ்ரீசயனா
பார்வதியறியாமல் பவானியிருக்கலாமோ ஸ்ரீசயனா

மகாவிஷ்ணு தரு.

அன்னியரல்லவே அரிவையென்தங்கையாள் நாரதனே
ஆத்திரப்படுவாளே சூஸ்த்திரமறிந்திட்டால் நாரதனே

நாரதர் தரு

கன்னிகழியாமல் கங்கையிருக்கலாமோ ஸ்ரீசயனா
கரும்புக்காசைவைத்து இரும்பைக்கடிக்கலாமோ ஸ்ரீசயனா

மகாவிஷ்ணு தரு.

எந்தவிதமாகயிந்த மணமுடிப்பேன் நாரதனே
சந்திரசேகரருடன் எந்தவிதமுரைப்பேன் நாரதனே

நாரதர் தரு

உரைப்பேனென்றேங்குறீர் உண்மைதேவர்களெலாம் ஸ்ரீசயனு
நிரையுங்கைலாயத்தில் சரியாககூடுவார் ஸ்ரீசயனு

மகாவிஷ்ணு தரு.

கூடினல்சபைதனில் குறையுமுறைக்கலாமோ நாரதனே
கூட்டத்துடன்வைகுந்தம் நாட்டமாவருவாரோ நாரதனே

நாரதர் தரு.

சூரியனுக்காக்கியம சுகமாயளிப்பேனென்று ஸ்ரீசயனு
நாரிபாகரிடம் நீரேஉரைசெய்யும் ஸ்ரீசயனு

மகாவிஷ்ணு விருத்தம்.

அறிந்துரைத்தநாதனே சொல்லக்கேளாய்
அருக்கனுக்குஅருக்கியங்கள் கொடுப்பதாக
சிறந்தசடையுடைய சிங்கீசருக்கு
சேதிநாம்அறிவிக்க வேண்டுமிப்போ
விரைந்ததொருவீதிதனில் பந்தலிட்டு
நெருக்கமுடன்குலோப்புகளை நிலையாய்க்கட்டி
தெரிந்திடவேமேளமுடன் வாத்தியங்கள்
சீக்கிரத்தில்தருவிப்பாய் சிறப்பிப்பாயே.

வசனம்.

பகவானிடம் நாரதர் இவ்விதமாகச்சொல்ல அப்போது பகவான்என்னயோசனை செய்தாரென்றால் சூரியனுக்கு அருக்கியம் கொடுப்பதாக வைகுந்தமழைக்கும்படி பந்தலிட்டு மேளதாளம்நிரையும்படி-முழங்குகின்றபோது கைலாயத்தில் சிங்கீஸ்வரர் சித்தர்கணங்கள் முப்பத்து முக்கோடிதேவர்களும் கொலுவாகவருவது.

சிங்கீசர் விருத்தம்.

அண்டரண்டம்ஆயிரத் தெட்டண்டமுண்ட
அனல்பெருகும்துசஸ்தம்பம் போலேநின்ற
சண்டர்களடிபணியும் கமலபாதன்
கங்கைதன்னை மறைத்துவைத்த கமலபோதன்
சண்டருக்குசண்டனாய் அவதரித்தோன்
சராசரத்தில்காட்சிதரும் சர்வரூபன்
தெண்டுகெதைவாளியுடன் ரிஷபமேறி
சிங்கீசரீசரிதோ வருகின்றாரே.

## சிங்கிசர் தரு.

அரியயன் அறியாத சிவமணியும் அமரர்போற்றும்
ஆலமுண்டருள் நீலகண்டனியாம

உறகபாணனை மேலணிந்திடும்
உம்பர்தேவர்கள் தாள்பணிந்திடும்
திருபுராதியை நகைத்தெரித்திடும்
திகழுமான்மழு காத்திலேந்திய (அரிய)

அமரர்சித்தர்முனிவர்சூழ்ந்திடவும் அகண்டபூரண
அதலவிதலசுதலம் போற்றிடவும்

செண்பகமலர் பாரிஜாதமும்
சத்தமேகமும் மாரிசொரிந்திட
நித்தியனே திரு சூஸ்த்திரநேத்திரர்
நேசனும்கையி லாசவாசகர் அரிய

டமரம்கின்னரி நாளமேளங்களும் கடாரிபேரிகை
டங்காநாகசுரங்கள் ஊதிடவும்

அமரர்சுருதிகள் நமரிமுழங்கிட
அஷ்டவசுக்கள் கஷ்டம்நீங்கிட
உமையாள்பாகன் கமலசேகரன்
ஒளிவிலதிவித நளினநாயகன் (அரிய)

ரிஷிகள்பத்தினிதவம்குலைத்தவராம் நேசவிஸ்வாசர்
நேர்த்தியாய்க்சுதிரோனை வைத்தவராம்

மூஷிகன் முருகேசனை யீன்றவர்
முப்புராதியை தகனம் செய்தவர்
வேஷமாய்வெண்ணீறும் பூண்டவர்
வேதனைசூதாக சமைத்தவர் (அரிய)

## சிங்கிஸ்வரன் கவி.

நயமுடனறிந்துரைக்கும் நந்திவாகனனேகேளாய்
செயமுடன்கைலாயத்தில் தேவர்களிருக்கின்றாரா
பயமுடன்கணங்கள்சித்தர் பாலகர்வசுக்களெண்மர்
வைகுந்தவாசரானோர் வந்ததை அறிவிப்பீரே

## வசனம்.

கேளும் நந்திதேவனே நமது கைலாயத்தில்முப்பத்துமுக்கோ
டிதேவர்கள்நாற்பத்தெண்ணாயிரங்கோடிரிஷிகள்கருடகாந்தர்வர்சித்

தவித்தியாதரர் அரிஅயன் தேவர்கள் யாவரும் வந்திருக்கின்றார்க ளாசொல்லும் நந்திதேவனே.

நந்திதேவர்-தரு.

வந்தார்கள்சகலபேரும் குந்தகமில்லாமலே
வைகுந்தவாசர் வரவில்லையே சுவாமி
நலமான நாரதரும் வல்லையே (வந்தார்கள்)

சுவாமி-தரு.

சாரதிமைத்துளோர் நாரதமுனிவரும்
சபைக்குவராவருத்த மென்னமோ யிப்பேர்
விபரீதமானசேதி தோணுமே (சாரதி)

நந்திதேவர்-தரு.

விபரீதம்வாராது வேதனையளித்தோற்கு
விழலுக்குநீரிரைப்பார் இல்லையேதொடு
வழக்குக்காரம்பிப்பார் தொல்லையே (விபரீதம்)

சுவாமி தரு.

மாருதபிரசண்டவாயுவை வேகமதாய்
வைகுந்தமதனைச்சேர்ந்து வருவீரே இப்போ
சையோகமானசேதி தெரிவீரே (மாருத)

சுவாமி வசனம.

வாரும் நந்திகாவலனே இந்த க்ஷணஞ்சென்று ஆதிவிஷ்ணு வைக்கண்டு அவர் வாராத சமாச்சாரம் என்ன அதை தெரிந்துவா ரும் நந்தி தேவரே.

நந்திதேவர் விருத்தம்.

வருகுவேன்ஒருநொடியில் வைகுந்தஞ்சென்று
வாய்வேகமாகமகா விந்தம்நாடி
அருணன்விடுசாரதிக்கு மேலதாக
அதிர்ந்திடவே அமலனிட பதம்வணங்கி
உருவாகமுப்பத்து முக்கோடிதேவர்
ஒருமிக்கச்சேர்ந்ததினால் உனைக்காணாமல்
தெரிவையிடபாகம்வைத்த சிங்கீசருன்னை
சீக்கிரமுடனழைத்து வரச்சொன்னாரே.

வசனம்.

இப்படியாக சிங்கீஸ்வரன் சொன்னபோது நந்திதேவர் வாய் வேகமாக வைகுந்தம்சென்று பகவானைக்கண்டு கையினால் தொழுதி ருக்கும்போது விஷ்ணுவானவர் நந்திதேவரைப்பார்த்துயேதென்று சொல்வது கர்ண்க.

மகாவிஷ்ணு ஜம்பை தரு

கைலாயகிரிக்கிசைந்த கர்த்தரிடகாவலனே
பெருவாய்உனக்குவரம் காட்சிதந்தேன்நானும்

நந்திதேவர் தரு.

ஆட்சியுடன்தேவரெல்லாம் அன்பர்களும்வந்தபோது
அரியும்மைக்காணுமலே அரனழைக்கச் சொன்னுர்சுவாமி

மகாவிஷ்ணு தரு.

அரனழைக்கத்நடையில்லை அருகனுக்குபூசைசெய்யு
ஆனகாளானதினுல் அரசன்சபையிலுரைப்பீர்

நந்திதேவர் தரு.

சபையோரும்தேவர்களும் சங்கரற்குஅறிக்கைசெய்வேன்
உபயோகமானசேதி உற்றதுரைநாதா

நந்திதேவர் வசனம்

கேளுமையயாசுவாமி பகவானே கைலாயத்தில் தேவர்களெல்லாம்வந்திருக்கிருர்கள் அவர்களுக்கெல்லாம் சொல்லும் பொருட்டாக உறுதியான சேதி தெரிவிக்கவேண்டுமையா சுவாமி.

மகாவிஷ்ணு கவி.

சித்திரை ஓராந்தேதி செயசுக்கிரவாரந்தன்னில்
உத்தமநட்சத்திரங்கள் உயிர்மூலமான காலம்
சுத்தமாய்திரியோதசி திதிசுபதினத்தின்னுளில்
உத்தமன்கதிரோனுக்கு உருதியாயளிப்பேன்பாராய்

வசனம்.

கேளும் நந்திகாவலனே சித்திரைமாதம் ஓராந்தேதி சுக்கிரவாரம்திரியோதசி மூலநட்சத்திரம் இந்த சுபதினத்தில் சூரியனுக்கு அருக்கியம் கொடுப்பதாக யோசித்திருப்பதால் நீர்இந்த க்ஷணஞ்சென்றுசிங்கீஸ்வரர் தேவர்கள் முதலானவரும் வந்தால் இன்றளவில் சகலசடங்குகளும்செய்துகாலைஉதையத்திற்கு சூரியனுக்கு அர்க்கியம் கொடுக்கலாமென்றும் நான்சொன்னதாகப்போய் சொல்லி அனைவரையும் இவ்விடம் வரும்படிசொல்லும் நந்திதேவனே

வசனம்.

இவ்விதமாக நந்தியிடம் பகவானுனவர் சொன்னபோது அதைக்கேட்டுக்கொண்டு கயிலாசம்வநது நந்திதேவர் சிங்கீஸ்வரனைத்தொழுது சொல்லுவது,

நந்திதேவர் தரு

ஊக்கமாகிநிறைந்த உருவே ஓஓஉருவே
உற்றசேதியறிந்தேன் குருவே சிவகுருவே

சிங்கீசர் தரு.

அறிந்தசேதியென்ன நலமோ அதுநலமோ
அசாத்தியம்செய்தது பலமே அதுபலமே

நந்திதேவர் தரு.

அருக்கனுக்குக்கருக்கியங்கொடுக்க விஷ்ணு
அனைவரை அழைக்கின்றார்மெய்யே இதுமெய்யே

சிங்கீசர் தரு

அய்யமுனக்கேதடாயேது தடையேது
அனைவர்தேவரும் இப்போது இப்போது

சிங்கீசர் வசனம்.

கேளும் நந்திக்காவலனே இப்போது நமது கைலாயத்தில் இராநின்ற தேவர்களனைவருக்கும் வைகுந்தம் போகவேண்டுமென்றுதெரிவியும் நந்திதேவனே.

நந்திதேவர் வசனம்.

ஆனல் அப்படியே தெரிவிக்கிறேன் சுவாமி

சிங்கீசர் தரு

வாருந்தேவர்களே வைகுந்தமேநாடியே
யேரும்அனைவோரும் எல்லோருமேகூடி
ஆருனூறம்சுவாதிஷ்டானம் ஆக்கினேயமறிந்து
ஆதிமூலம்சபையைநோக்கி அனைவோரும்வாரும்
பாரும்நடப்போம்அருக்கனுக் கருக்கியம்செய்து
அமுதளிக்கமனதாய் அன்புமிகசந்தோஷமாய்
அனைவரும்வருவீரே திருமருவும்வைகுந்தம்
தெரிசிக்கவேகண்டோம் அரிகரியென்மைத்துனனை
அறிவேன்இடமே தெரிவேன் (வா)

பொது வசனம்

இவ்விதமாகத்தானே பரமசிவமானவரும் தேவர்கள் அனைவரும்வைகுந்தம் வந்தபோது வைகுந்தத்திலிராநின்ற விஷ்ணுவானவர் எதிர்சென்று சொல்வது.

மகாவிஷ்ணு தரு

ஆதியில்சத்திசிவம் அரனுகின்றவா
அன்புடன்வந்ததே நல்லது
விடையேறிவந்ததிதுவே தருணம்

சிங்கீசர் தரு.

தருணமிதுவந்துநான் அருணனுக்கருக்கியம்
தரணியில்கொடுப்பவர்க ளில்லையே இப்போ
திறமாய்நினைந்தவர்கள் இல்லையே

மகாவிஷ்ணு தரு.

தற்பராமெய்ப்பதம்அப்பணி சடையோனே
நீரெப்போவருவீரென்று பார்த்திருந்தேனிப்போ
நேத்திரனுக்கருக்கியம் செய்குவேன்

சிங்கீசர் தரு.

மூப்பத்துமுக்கோடிதேவர்கள் வந்தனர் இப்போ
ஒப்பிதேவர்களுக்கமுதளிப்பீர்
செபிக்கதிரோனுக்கர்க்கியம் செய்வீர் (முப்பத்)

மகாவிஷ்ணு விருத்தம்.

அளித்திடுவேன்கதிரோனுக்கர்க்கியங்கள்
அனைவர்களும்வந்ததினால் சந்தோஷந்தான்
களிப்புடனேதங்களிடப் பாகம்பெற்ற
கமலாக்ஷியெனதுதங்கை வாவுங்காணேன்
செலிப்புடனேகாரியங்கள் செய்துமென்ன
கெருடமுனிவோர்க்கமுது யீந்துமென்ன
சலிப்புடனேநான்செய்த குற்றமென்ன
சங்கரனேஎனக்கறிய ஓதுவீரே

வசனம்.

கேளும் பரமதத்துவமே செஞ்சடாதாரியாகிய பரமக்கடவுளே அனைவோர்களும் வந்து சூரியனுக்கு அருக்கியங்கொடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்திருக்க என் தங்கையாகியபராசத்திவராமல் இருக்கவேண்டிய காரணம் என்ன, நான் செய்த குற்றமென்ன எனக்கு விபரமாக தெரிவிக்க வேண்டுங் கர்த்தனே

சிங்கீசர் தரு.

உரைத்திடுவேன்கேளும் அந்த உமையபராசத்திசேதிகளை
வருத்தமுடன்தபங்கள்செய்து வந்துயிடப்பாகம்பெற்றமுதல்
சிரசில்முடிபணிந்துரத்தின செகசோதிமாணிக்கம்மார்பணிந்து
நிரைந்தபுஜமணிந்துகரந்தன்னில் நிகரில்லாவேலாயுதமணிந்து
மேருகிரிக்குமேல்அந்தப்புரத்தில் மலையாளபகவதியாகநின்று
சுகமுடன்ஆண்டுவாராள்பராசத்தி சோதிசுடர்மயமாகிநின்று
அன்பருக்கனபராகிஉமையவள் அடியவருக்குதாயாய்ஆதரித்து

வசனம்

கேளும் மைத்துனா உன் தங்கையாகிய பராசத்தியானவள் வரவில்லை என்று என்பேரில் வருத்தப்படவேண்டாம் கைலாயகிரிக்கு

தென்மேற்கில் மலையாளமென்று பேருண்டாக்கி பகவதிரூபமெடுத்து மகுடா அபிஷேகம்பெற்று அன்பருக்கு அனபாகவும் துஷ்டருக்குத் துஷ்டையாகவும் இருந்து தானே சத்திமயமாகநின்று வருகிருள் அதற்காக இந்தட்சணம் நிருபமெழுதி வாய்வுபகவானிடந்தந்தால் அதை தெரிந்துகொண்டு அதிக சீக்கிரமாகவந்து சேருவாள் மைத்துனு.

பொதுவசனம்.

இப்படியாக பரமசிவன் சொன்னபோது பகவானுணவர் நிருபமெழுதி வாயுதேவனிடம் தந்தபோது வாயுபகவான் நிருபமெடுத்துக்கொண்டு போகுந்தருணத்தில் பகவதியாக ரூபமெடுத்திராகின்ற பராசத்தி கொலுவுக்கு வருவது.

பராசத்தி விருத்தம்.

அருள்பெருகும்சிவசத்தி இருசமையாசத்தி
ஆங்காரஓங்கார மானசத்தி
பொருள்தரும்சமையா சமையத்தில்பொன்பாகம்
போற்றிசெய்யும்சிவ பெருமான்சத்தி
மருளர்அன்பர்காக்கு மயமானசத்தி
மகாவிந்தம்வைகுந்தம் அமர்ந்தசத்தி
இருள்நீக்குமேக வொளிவானசத்தி
ஈஸ்பரியும்கொலுவாக வருகின்றாளே.

பராசத்தி தரு

அரவபூஷணி உலககாரணியாள் ஸ்ரீங்காரரூபி
அகிலமுண்டருள்முகிலின் சோதரியாள்
கரமாவிதிருசூலிகாரணி கங்கையில்தபஞ்செய்தமீரணி
சரவணபவனையீன்றகாரணி சர்வலோகமும்ஆண்டபூரணி
ஓரெழுத்தினில்ஓங்கிநின்றவளாம் உலகசத்தி
உம்பர்தேவர்யிடுக்கந் தீர்த்தவளாம்
காரிமேகம்பூமாரிசொரிந்திட கன்னியர்க்கவிஞர்பாடிட
நாரியர்சாமரைகள்வீசிட நம்பினவர்களன்புசெய்திட
ஒளியும்சுடரொளியாகநின்றவளாம் ஓங்காரபயிரவி
உத்தமகதிரோனைத் தந்தவளாம்
மலையரையன்புத்திரியாகிநின்றவள் மாயனுக்குப்பின்பிறந்தவள்
வேலும்சூலம்கபாலம்பூண்டவள் வேறுசுரூபியாங்காளியானவள்
கிலையும்வேம்பும்இலையமர்ந்தவளாம் செகதீஸ்பரி
சித்தத்தில்குடிகொண்டு நின்றவளாம்

உலகில்தீவரஉருவமாகிய உம்பருக்கொருதாயுமாகிய மலையாளபகவதியுமாகிய மந்திரசேகரிவிந்தையாகிய அரவ

பராசத்தி கவி.

கருமுகில்கமலபாதன் காணுதகாளகண்டர்
எரிமழுமானேயேந்தும் யீசனைத்துதிக்கவேண்டும்
அரிவையென்தாதிமாரே அர்ச்சனைக்குகந்தவில்வம்
மருவுமல்லிபாரிசாதம் மகிழ்வுடனெடுத்துவாரீர்.

வசனம்.

ஸ்ரீசயனனுகிய ஆதிவிஷ்ணுவும் பிர்ம்மதேவனும் கர்த்தமயமாகிய முச்சுடரென்றும் சொல்லாநின்ற பரமக்கடவுளுடையதிருவடிக்குப் பூசைசெய்யவேண்டும் அதற்காக வில்வம் மருவு மருக்கொழுந்து பாரிசாதம் இதுகளை யெடுத்துவாருந் தாதிமார்களே.

தாதி கவி

எந்நாளும்பூசைசெய்து யிடப்பாகம்பெற்றதாயே
கண்ணுனார்யீசர்தம்மை கண்டுநாந்தெரிசிக்காமல்
குன்றுமல்தபங்கள்செய்ய கோதையேஎண்ணங்கொண்டாய்
விண்ணுளுமீசரெங்கே விபரமாயறிவிப்பாயே

வசனம்

கேளுமம்மா செகதீஸ்பரி இதுகாலமாக தபம்செய்து இடப்பாகம் பெற்றுக்கொண்டாயே இப்பவும் கைலாயம் சென்று பரமசிவனைத் தெரிசிக்காமல் பூசை செய்யவேண்டியதென்ன நாம் அனைவரும் சென்ருல் அவர்அந்தயிடம்விட்டு யெந்தவிடம் போயிருப்பார் நீங்களிருவரும் பிரிந்து தனியாகயிருக்கவேண்டிய காரணமென்ன பரமசிவமிருக்க நீ முடிதரித்துக்கொண்டு இந்தத் தேசத்திற்கு மலையாளமென்று பேருண்டாக்கி பகவதி ரூபமெடுத்து இருக்கவேண்டியதென்ன அதையெங்களுக்குத் தெரியச்சொல்லுமம்மா தாயே

பராசத்தி தரு.

பாருமேனீர்மேருவுக்கு வடபுரத்தினில்
பண்பாய்மனிதரவர்போல் தங்கவர்ணமாம்
சேருய்காலாயிரமுழஉயரமாம்சிறப்பானநாலுலட்சம்வயதுதான
உண்ணமுதுபொசிப்பது ஆலங்கனியே (ம்மா
ஒருமையுள்ளசதாசிவம் தெய்வமதுவே
எண்ணுமிந்தகர்த்தரவர் எங்குமிருப்பார
அவரையெங்குதண்டுதேடப்போறேன் எம்பெருமானே

தாதி வசனம்.

கேளுமம்மாதாயே செகத்ரக்ஷகி கைலங்கிரிக்கு வடபுறத்தில் இருக்கப்பட்டமனிதர்களுக்கு நாலாயிரம் முழம் உயரமும் நாலுலட்சம் யோசனை அகலமும் அவர்கள் பொசிப்பது ஆலக்கனியென்றும் முக்கண்படைத்த பரமசிவமானது ஒரேதெய்வமென்றுசொல்வதும் சரிதான் மகம்மேருகிரியென்றும் சொல்லாநின்ற கைலாயகிரிக்குக் கிழக்கில் யார்தெய்வமாக யிருக்கின்றது தெரியச்சொல்லுமம்மாதாயே.

பராசத்தி தரு

விளம்புகிறேன்மேருவுக்கு கிழ்ப்புறந்தன்னில்
விதமானமனிதர்களும் நீவவர்னமாம்
திருநேத்திரர் அவருடலம் அவர்வயதாண்டுலட்சமாகுமம்மணி
அவையறிந்தவிஷ்ணுமவர் தெய்வமம்மணி
அருந்துவதும்நாவற்கனி யாகுமம்மணி
களங்கமில்லைபொய்கொலையுங் களவுமறிவார்
கண்டபடிசத்தியங்கள் இல்லையம்மணி

தாதி வசனம்.

கேளுமம்மா தாயே கைலையங்கிரிக்கு கீழ்ப்புறத்தில் இருக்கப்பட்ட மனிதர்களுக்கு நானூறுமுழ உயரமும் இரண்டுலட்சம் வயதும் பொசிப்பது நாவற்கனியும் ஒரேதெய்வமான விஷ்ணுவென்றும் சொல்லவந்தாயே கைலாயகிரிக்குமேற்கில் ஆர் தெய்வமாகயிருக்கின்றார் இதில் இருக்கப்பட்டமனிதர்கள் வயதும் அவர்கள் பொசிப்பதும் அவர்கள் உயரமும் நிறமும்சொல்லுமம்மா தாயே.

ஈஸ்பரி தரு.

சொல்லுகிறேன்மேருவுக்குமேற்கிலம்மணி
சுத்தமாய்மனிதர்நிலம் கருத்தவண்ணமாம்
வல்லவன்உயரமது நான்காகுமே
சல்லாபமுடன்பொசிப்பது மாங்கனிஒன்றே
சத்தியங்கொலைகளவு சூதுயில்லையே
எல்லையில்மலையாளமெல்லா மென்னுதேமயம்
எவர்களுக்குகாட்கிதருஞ் சுரூபநானம்மா

தாதி வசனம

கேளுந்தாயே கைலாயகிரிக்குமேற்கில் இருக்கப்பட்ட மனிதர்களுக்கு கருத்த திரேகமும் நாற்பது முழஉயரமு மொருலட்சமவ

148098
சென்னை-600 0

யதும் பொசிப்பு மாங்கனியும் பொய் சூதில்லையென்றுஞ் சொல்லவந்தாயல்லவா கைலாயகிரிக்குத் தெற்கில் யார்தெய்வம் அவ்விடமிருக்கப்பட்டவர் நிறம் உயரமுந் தெரியச்சொல்லுமம்மா தாயே

ஈஸ்வரி தரு.

பொய்யல்லமேருவுக்கு தெற்கேயம்மணி
பொங்கமுடன்மனிதர்கள் அனேகநிறந்தான்
அவர்உயரமதுநாலுமுழ மாகுமம்மணி
உண்ணுவதருசுவை அனேகவிதந்தான்
பண்டானபொய்கோலையும் பாவமுண்டோடி
பண்பில்லாவிஸ்வாச பக்தியில்லாதார்
செண்டானமுரமைகெட்டு மையல்கொண்டுதான்
செயலாய்அனேகவிதந் தெய்வமுண்டோடி
கொண்டானவயது நூறுயென்பார்கள்
கோதையரேநிச்சயந்தான் இல்லையம்மணி
எண்டிசைநாலுலகமுமிப்படியிருக்க
ஈஸ்வரரையெங்கேகண்டு தேடுவேனம்மா.

தாதி வசனம்.

கேளுமம்மா தாயே ஜெகத்ரக்ஷகி முக்கண்படைத்த பரமசிவமானவர் எள்ளுக்குளெண்ணையைப்போலெங்குமிருப்பார் அவரைத்தேடுவது சரியல்ல இப்போது லிங்கத்திற்கு பூஜைசெய்வதற்காக அனேகவித புஷ்பங்களும் வில்வம் பாரிசாதங்கோங்குமுதலான புஷ்பங்களும் கொண்டுவந்தேன் பூசைசெய்யுமம்மா தாயே.

ஈஸ்பரி பூசை தரு.



## ஈஸ்வரி லிங்கத்தை பூஜைசெய்தல்

பூசைபுரிவேன் சிங்கேசா லிங்கேசா (பூசைபுரி)

பொற்பணிதற்பரா அப்பணியான்சொற்பொருள்
மெய்பொருளான இப்புவியோனே
முப்புராதிபர் நற்பரையானே
ஒப்பியேலிங்கேசா உருவமுமான (பூ)

பீஜாட்சரகதிரொளிதீபா பத்மநாபா
பீதாம்பரசுடரொளி பவனெனுந்தீபா
சாதாகுளிவிஷமதை உண்டவிஞபா
சற்குணசுரரை அளித்திடும்நாபா
பீதாம்பரம்கொடுக்கும் யீசாலிங்கேசா (பூ)

மூலாதாரசுழிலிங்கா ராமலிங்கா
முச்சுடராகிய அச்சுதபூரணு
நற்சுபையாடிய நற்குணகாரணு
கச்சுடர்கற்பூர தீபநிரஞ்சனு
ஒளிதிருவாகிய நாரணு (பூ)

அருணகிரணசர்வ லோகசத்தியபாகா
அந்தகனைக்கண்ணு லெரித்திடுமீசா
அம்புவியோர்க் கமுதளித்திடும்தேவா
துணைவருவாயெதிர் தும்பிக்கைதாதா
எணையாதரித்திடும் யேகாம்பரநாதா (பூ)

ஈஸ்பரி கவி.

அர்த்தலிங்ககேசருக்கு அம்பிகைபூசைசெய்ய
கர்த்தனும்ஆதிவிஷ்ணு கடிதமும்விழுந்தபோது
உருத்தியேஉமையாள்பார்த்து ஓலையைக்கண்டெடுத்து
வருத்தமும்நீங்கிமாது வாசித்துப்பார்க்கின்றாளே

வசனம்.

இப்படியாக பரமேஸ்பரியாகப்பட்டவள் மலேயாளத்தில் பூசை செய்ய அத்தருணத்தில் மகாவிஷ்ணுவானவர் வாய்வுபகவானிடங் கொடுத்தனுப்பிய நிருபத்தை வாய்வுபகவரன் யீஸ்பரிபூசைக்கு முன்பாகப்போட அதை எடுத்துவாசித்துப்பார்ப்பது காண்க.

நிருபம் வசனம்.

ஸ்ரீயலங்கிருந்த சகலகுணாரம் சர்வேஸ்பரி சர்வசாயுச்சியானந்த சார்வபூரணி அகண்ட வேதவேதாந்தரத்தின பூஷித சதாநந்தி ஆங்காரிஓங்காரி பிரணவசிலாக்கிய பிரமாண்ட புண்டரீகபீஜாட்சர சடாட்சரி நாரணி உனது சமுகத்திற்கு உனது தமையனாகிய அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகிய ஆதிவிஷ்ணுவானவர் எழுதியநிருபமாவது என்னவென்றால் ஓராங்தேதி சுக்கிரவாரம் திரயோதசிமூலநட்சத்திரம் பூரணசந்திர உத்சவமானபடியால் இந்த கடிதங் கண்டவுடன் இன்றைத்தினமே வந்தால் இரவில் சகலசடங்கும்சேகரித்து காலை உதயத்திற்கு சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்து விடவாம் நீ தடையில்லாமல் வந்து சேரவேண்டியது வேணும் சிரஞ்சீவி தங்காய்.

ஈஸ்பரி கவி.

காரிழைதாதிமாரே கதிரோனுக்கருக்கியங்கள்
சாரியாய்நடத்தவேண்டி தமயனும்நிருபந்தந்தார்
சீருடன்வரிசைகொண்டு சீக்கிரம்செல்லவேண்டும்
கூரிடமேளதாளம் குமறிடநடத்துவாயே

வசனம்.

கேளுங்கோள் தாதிமார்களே வைகுந்தத்தில் மகாவிஷ்ணுவானவர் இன்றையதினம் புதுமொழியாக சூரியனுக்குஅருக்கியம்கொடுப்பதாக நிருபம் அனுப்பினர் நாம் அனைவரும் வரிசைகளை எடுத்துக்கொண்டு வைகுந்தம் நடப்போம் வாருங்கள் தாதிமார்களே.

தாதி தரு சம்பை.

வாரும்வாரும்செகதீஸ்பரி வைகுந்தமேநாடி
சீருடனேவரிசைகொண்டு சென்றிடுவோங்கூடி

ஈஸ்பரி தரு சம்பை.

வேறுவிதமேளதாளம் வெகுவிதங்கள்
சாரியுடன்தமையன்கண்டு தன்மனதுகளிக்க

தாதி தரு.

கதலிகொய்யாக்கனிகள் கர்க்கண்டுசர்க்கரையும்
கனிந்தமாங்கனியுங்கொண்டு காரிழையேநடப்போம்

ஈஸ்பரி தரு

தாதவிழ்பாம்பணிந்தமார்பன் சங்கருமயங்கிருப்பார்
பாதமதைதெரிசித்துநாம் பணிவோம்தாதிமாரே

தாதி வசனம்.

கேளும் பரமேஸ்வரி இப்பவும் நமக்கு நாழிகையாகின்றது சனு தியில் நடப்போம் வாருமம்மா தாயே.

ஈஸ்பரி தரு

அரிவையெந்தன் தாதிகளா அனைவர்களும்வருவீர்களே
கருமுகிலவர்வீடுதேடியே யென்பாங்கிமாரே
களிப்புடன் நடத்திடுவீரே

திருமருவும்வைகுந்தமாம் செங்கதிரோன்அருக்கியமாம்
உரிமையுடன்செய்கின்றூர்களாம் என்தமயனும்
உலகத்தோர் வருந்துரார்களாம்

அண்டாதகோபுரமாம் அதற்கெதிரேமண்டபமாம்
கொண்டாடிநிற்கிறூர்களாம என்தமபனும்
கண்டீரோவண்டணிகளா

கண்டோம்குலோப்புகளை கமலணிடபந்தல்களை
தண்டைடபுடன்நடிக்கின றூர்களாம்
ரம்பையூர்வசியும்வந்து தமயன்பாதம்வணங்குவீர்களே (அ)

பொது வசனம்

இப்படியர்க யீஸ்பரியானவள் தாதிமர்தளைக் கூட்டிக்கொண்டு வைகுந்தம்வந்து சேர்ந்தபோது மகாவிஷ்ணுவானவர் யூஸ்பரியைப் பார்த்துச்சொல்லுகிற விதங்காண்க

மகாணுவ்ஷ்ணு கவி.

தங்கையேவாரும்தாதி மார்களேவாரும்வாரும்
இங்குநீர்வந்ததாலே இன்பமாய்மகிட்சிகொண்டேன்
மங்களமாகசிங்காதனத்தில் வீற்றிருங்கள்
செங்கதிரோனுக்கருக்கியம் செய்வதையறிந்திடீரே

வசனம்

வாருந்தங்கையே வாருந்தாதிமார்களே நீங்களனைவரும் இந்தத ங்கசிம்மாதனத்தில் வீற்றிருங்கள் நான் சூரியனுக்கு அருக்கியம்செ ய்யப்பட்டதை யெல்லாருங் கண்ணினுல் பாருங்கள் தேவர்களே

மகாவிஷ்ணு தரு.

அருக்கியம் நான்கொடுப்பேன் சிவ
அரனார்திரிநேத்திரத்துக் கன்புபுரிய (அருக்)

உருக்கமுள்ளவர்நெஞ்சில் ஒடுங்கியபொருளே
அருக்கனுக்கருக்கியம் மெய்திட்டேனருளே (அருக்)

முப்பத்துமுக்கோடி தேவர்க்குமுதலே
செப்பிய அயனுக்காய் ஜெகஜோதிமுதலா (அருக்)

திக்குதிசைகட்கெல்லாம் சிவமயப்பொருளே
உக்கிரபார்வைநீக்கி ஒடிங்கிட்டேனருளே (அருக்)

அண்டபிண்டமும்அளாவிய சலத்தை
குண்டலிசங்கமாய்க் குடித்திட்டஅருளே (அருக்)

மகாவிஷ்ணு விருத்தம்.

பக்தியுடன்முப்பத்து முக்கோடிதேவர்
பாலர்களேமுனிவர்களே சொல்லக்கேளீர்
வெற்றியுடன்அரனுக்கு பூசையாச்சு
வேளையுடன்அமுதளிக்க வேண்டுமிப்போ
சுத்தமுடன்ஸ்தானபானங்கள்செய்து
துரிதமுடன்பந்தலுக்கு வருவீர்நீங்கள்
அத்திமுகன்அரன்தனையே முதலாய்வைத்து
அறுசுவைகள்அமுதளிப்பேன் அருந்துவீரே

வசனம்.

கேளுங்கள் முப்பத்துமுக்கோடி தேவர்களே இப்போது நாம் சூரியனுக்கு அருக்கியம் கொடுத்தபடியினுல்அமுதளிக்கவேண்டும் அவாளவாள் சந்தியாவந்தனம் நேம நிஷ்டைகளை முடித்துக்கொண்டுசெனுதியில்வாருங்கள் தேவர்களே

மகாவிஷ்ணு தரு.

நாரதனே இலைபோடும் இலைபோடும்

நாரதர் தரு.

நான்சம்மதித்தேன் முதல்கூறும் முதல்கூறும்

மகாவிஷ்ணு தரு.

விநாயகர்க்கோர் இலைபோடும் இலைபோடும்

நாரதர் தரு.

விக்கினந்களித்தேன் வேறேகூறும் வேறேகூறும்

மகாவிஷ்ணு தரு.

பிரமனுக்கோர் இலைபோடும் இலைபோடும்

நாரதர் தரு.

போட்டேன்பருதி வேறேகூறும் வேறேகூம்

மகாவிஷ்ணு தரு.

பரமசிவத்துக்கு உந்தனிஷ்டம உந்தனிஷடம்

2

நாரதர் தரு

பாப்பினேன்முன் திலைவட்டம் சுவாமிவட்டம்

பரமசிவன் விருத்தம்

தந்திமாமுகனுக்கோர் இலையுமிட்டாய்
சதுர்முகப்பிர்ம்மனுக்கோர் இலையுமிட்டாய்
எந்தனுக்குமூன்றுஇலை போட்டதென்ன
இன்பமுள்ளமைத்துனரே இதைநீர்கூறும்
இந்திரர்தேவர்க்குஇலை போடவேண்டாம்
எனக்குபதில்தானுரைத்து இலைகள்போடும்
பக்தியினில்யென்னையழைத்து பங்கம்செய்ய
பரந்தாமாஉன்சூது அறிகிலேனே

வசனம்.

கேளும்மைத்துனா விநாயகருக்கும் பிர்ம்மதேவனுக்கும் ஒவ்வொருஇலை போட்டு எனக்கு மூன்றுஇலை போட்டதென்ன இதற்குப்பதில் சொல்லாமல் மற்றதேவர்களுக்கு இலைபோடவேண்டாம் ஏதோ ஒருவிதசூதினால் என்னை அழைப்பித்து இந்தபங்கஞ்செய்ய யெத்தனித்தாப்போலே தோணுகின்றது இதை எனக்கு விபரமாகத்தெரியும்படியாகச் சொல்லும் மைத்துனா.

மகாவிஷ்ணு தரு

மாமனுக்குமெந்தனுக்கும் இந்தநாள்மட்டும்
மனவருத்தம் நேர்ந்ததில்லையே
நேசமுள்ளநாரதரை இலைகளிட்டு
நிஷ்டூரம்செய்த தென்ன மா

நாரதர் தரு

பக்திதன்னில்வஞ்சனைகளும் செய்பவர்களோ
பரந்தாமாகண்ட துண்டோ
வந்தவர்க்குஇலைகளிட்டால் எந்தன்மீதில்
வருத்தப்பேன் வைக்கவேண்டும் பக்

பரமசிவன் தரு

வருத்தமில்லைநாரதரே யென்னுடன்சேர்ந்த
உமையவளும் தானிருக்க
கிருத்தமுடன்யென்மைத்துனரே மூன்றுஇலைகள்
சீக்கிரத்தில் போட்டதென்ன வரு

நாரதர் தரு.

கோத்திரத்துக்கோரிலேதான் உன்மீதிருக்கும்
குடிப்பெண்ணுக் கோரிலேதான்
-வேற்றுமையில்லாமலிட்டே பந்தியில்நானும்
வீண்பழி போடுகிறீர்கள் கோ

ஈஸ்பரி விருத்தம்

சற்றுமறிவல்லாத முனிவனேகேள்
சங்கரனோடுமையவளும் நானிருக்க
சித்தமதிலெண்ணுமல் இலைகளிட்டு
தில்லுமுல்லும்பேசுவதால் சுகமுண்டாமோ
குற்றமில்லாவைகுந்த வாசரோடும்
கோத்திரத்தில்பிறந்தவளும் நானிருக்க
நத்தியுடன்வந்தவளார் குடிப்பெண்ணென்றாய்
நாரதனேயெனக்கறிய ஓதுவீரே

வசனம்.

முக்கண்படைத்த பரமசிவத்நுக்கு இடதுபாகம் பெற்றவளாகிய உமையவள் நானிருக்க ஆதிவிஷ்ணுவின் கோத்திரத்திற் பிறந்தவள்நானேதவிர வேறே குடிப்பெண்ணென்று சொல்லுகிறாய் தில்லுமுல்லும்சொல்லாமல் பிரட்டான வார்த்தைகளைச் சொல்லி பிரட்டாமல் நன்றாய் தெரியும்படியாகசொல்லும் நாரதமுனிவரே.

நாரதர் தரு

தெரியச்சொல்லுவேன் செகதீஸ்பரி அம்மா யீஸ்பரி
சிவன் சிரத்தைவிட்டிழிந்திடும் பகிரதி அம்மா பகிரதி

கங்காபவானி தரு.

தரணிதனில்வருக முனிவனே அப்பா முனிவனே
சர்வேஸ்வரனுரைத்தால் இழிவனே இப்போ இழிவனே

நாரதர் தரு

தந்தைவிஷ்ணுவும்வா வழைக்குறார் வாரும் அழைக்குறா
உன் தாயும்உன்மேல்கோபித் திருக்கிறாள் வாரும் இருக்கிறாள்

கங்காபவானி தரு

வந்தேன் தந்தைதாய்மனக் களிக்க மனங் களிக்"
வானுலகத்தார்கண்டு ஜொலிக்க கண்டு ஜொலிக்

பொது வசனம்

இப்படியாக கங்கையம்மன் பரமசிவன் சடாபாரத்திலிருந்து இழிந்து வருகின்றபோது உமையபார்வதியாள்கண்டு ஏதென்று சொல்லுகிற விதங்காண்க.

29

ஈஸ்பரி தரு நொண்டிச்சிந்து

பார்த்தீரோ தேவர்களே-இதோ-பரமன் முடியிலொரு பாவை யிருக்க, சூஸ்த்திரத்திரதாதியென்றும்-உலகமெல்லாம்-சுத்தநவம யமணிகளென்றும் கீர்த்திகளெங்குமிருக்க-கடவுளென்று-கெம்பீர முடனேசிமோட்டியிருக்க தோற்றங்களதிந்ததாரோ-தேவர்களெல் லாம்-தொல்லுலகில்ரிஷிகள் சொல்லுவாரே அரனிடசெஞ்சடையி- லுருவமாய்-அரிவையுடனேயவளோ பெருமையுடனே தமயன்-சூதி னல்-பிரம்மனல் சிருஷ்டித்துவைத்திட்டாரோ சொல்லுவீர் நாரத னே-இவள்சேதி-தூத்தியிலவம்பஞ்சாய்க்காற்றிலோட்டுவேன் வல்ல மையுடனிருந்தமாதரை-வாட்டுகிறேன்-கெடிபெறஓட்டுகிறேன். (த)

ஈஸ்பரி விருத்தம்

பார்த்திட்டேன்பாமனிட செஞ்சடையிலிப்போ
பாவையொருபெண்ணவளு மிருக்கக்கண்டேன்
கார்த்தவள்போல்உலகமெல் லாங்கெடிமிகுத்து
கன்னியிவள் திறத்துடனே இழியக்கண்டேன்
பார்த்திபனுமென் தமையன் செய்தசூதோ
பரமனுக்குமருதாரம் வந்தமாதோ
நாற்றிசையுஞ்சஞ்சரித்த முனிவனேகேள்
நயந்துநீர்வந்தவிதம் விளம்புவீரோ

வசனம்.

கேளும்பிள்ளாய்நாரதனே முக்கண்தாரியாகிய பரமக்கடவுளு டைய சடாபாரத்தில் இருந்துவருகிற பெண்ணானவள் இன்னதெ ன்றுதெரியவில்லை பரமசிவத்துக்கு மறுதாரம் வந்தவளா அல்லதுஎ ன் தமையனாகிய மகாவிஷ்ணுவானவாசெய்தசூதோ எனக்கொன்று ம் தெரியவில்லை.

நாரதர் தரு

சொல்லப்பயமாகுதம்மா சுந்தரிசவுந்தரியே
அல்லல்செய்யவேண்டாமம்மா அடியேன் உண்மைஉரைக்கிறேன்கேள்
அண்டபிண்டமுலக மூர்த்தியார்தான் இருந்தார்
அக்காலத்திில்கொண்ட கருமுட்டையாகையால்
குவலயந்தன்னில்வந்து நிரைத்திருக்கவே (சொல்)
ஐயுமென்றசத்தமதில் நாதமொன்றுதோத்தமிட
ஐயுமென்றகருவுமுத்தி அழுத்த அண்டமாச்சுதம்மா (சொல்)
கருவாகி அறிவுமுத்தி கன்னியர் அருபியாகி
சரியானசத்தியாலே சதாசிவமுண்டானாம்மா (சொல்)

சத்திக்குமூன்றுகண்ணும் தன்னுடன்பிறந்திருக்க
பித்தனார்க்குநெத்திக்கண்ணை பிரித்துதான்யீந்தாரம்மா (சொல்)
நெத்தியில் அளித்தபோது நெடுந்தணலாய்சுவாலைவீச
கர்த்தரும்மதிமயங்கி சீளைத்துவிழுந்தார்புவியில் (சொல்)
கலையமதில்சலத்தைவிட்டு கங்கையென்றுபேருமிட்டு
நிலைகலங்கிநின்றவர்க்கு நெற்றிக்குநேராகவைந்தார் (சொல்)
வைத்தவுடன் சமையசத்தி வந்தாரம்மா ஆதிமூலம்
இத்தனைநாளில்லாக்கலையம் இருக்குதென்றுசாய்த்துவிட்டார் ()
சாய்த்தபோதுசவங்கள்கொட்டி தன்குடையிலவிழுந்ததப்போ
மாயவனார்பாதமதில் மடக்கிசலத்தைப்பிடித்தாரம்மா (சொல்)
பிடித்தசலம்நிலைத்திடாமல் பெண்ணுருவமானதம்மா
தடுத்தவருங்கங்கைஎன்று சடையில்வைத்தார்உன்தமயன் (சொல்)
கோடாலிக்காம்பதுவும் குலத்துக்கீனமாச்சுதென்று
எடாகூடமூன்தமயன்செய்தால் பிஞ்சகனார்யென்னசெய்வார் ()

நாரதர் கவி.

ஆவதும்விஷ்ணுவாலே அழிவதும்விஷ்ணுவாலே
பாவையாள்கங்கைதன்னை படைத்தவர் அவர்தானம்மா
தேவர்கள்முனிவர்க்கெல்லாம் தெரிவித்தநிவரேயாகும்
மூவரில்ஒருவர்நின்று மோசமேசெய்தாரம்மா

வசனம்.

சரணம் சரணமம்மா தாயே ஆவதும் அழிவதும் செங்காபவானியை உருவாகப்படைத்ததும் விஷ்ணுவே யல்லது வேறே ஒருவருமல்லவம்மா தாயே

ஈஸ்பரி தரு

அப்படியாகல்லதாகட்டு எந்தன் அண்ணனெனசத்தம்போகட்டும்
உமையளவண்ணனும்மாறுபாடுசெய்தார்
இப்புவிகருவெல்லாம் யெரிதணலாக்குறேன் அப்

மகாவிஷ்ணு தரு.

தங்கையேகோபங்கொள்ளாதே இப்போசாபமும் அழியச்செய்யா
சங்காார்சடைதனில் தங்கினசலமது
திங்களுருவமானசேதியை உரைக்குறேன் தங்

ஈஸ்பரி தரு

சலத்தைப்பெண்ணாக்கின யோகியேஎன்னை
சதிசெய்யவந்தாயே துரோகியே
குலத்தைத்கெடுக்கஒரு கோடாலிகாம்பதுபோல்
நலத்தைக்கெடுத்தாயே நான்தமகையாவனோ சலத்

மகாவிஷ்ணு தரு.

எட்டிக்குத்தேன்விட்டிழைத்தாலும் அதற்கு
யேர்க்குமோநாவில் உரைத்தாலும்
பகைக்கிவார்த்தையைப் பலிக்கினபோதிலும்
மட்டுக்கெட்டவார்த்தை மாறுமோஒருக்காலும் எ

ஈஸ்பரி விருத்தம்.

கட்டுபடாவசனங்கள் காட்டினாலும்
கதிரோனும்பெருந்தணலாய் வீசினாலும்
ஓட்டுறவாயெனையிகழ்ந்து பேசினாலும்
உன்மகளை இனியொருக்கால் நாடமாட்டேன்
ஓட்டியிடபாகமது தந்தயீசர்
ஒளித்துவைத்தகாரணமு மறியவேண்டும்
சட்டமுடன்கெங்கைதனைப் பிரித்துவிட்டு
சர்வேஸ்வரரைபதில்மொழியுங் கேட்போம்வாரீர்.

வசனம்.

கேளும் எனது தாதிமார்களே எனது தமையனானவர் கட்டுக்கதைகளைப்பேசி இனிமேல் உறவாட வந்தபோதிலும் கதிரோனாகிய சூரியன் பெருந்தணலாக வீசினபோதிலும் இவருடைய குமாரத்தியாகிய கெங்காபவானியை ஒட்டவைப்பேனோ இனிமேல அவளைத் தள்ளிவிட்டு பரமசிவத்தை ஒருசேதி கேழ்க்கவேண்டும்பவானியை பிடித்துத் தள்ளுங்களம்மா தாதிமார்களே.

ஈஸ்பரி தரு

காதர் அருகில்வீற்றிருக்கும் நாணங்கெட்டசவுத்தியெழுந்திருடி
பாதபங்கயரான பரமன்செஞ்சடையினில் பதுங்கினசவுத்தி

கெங்கைபவானி தரு

பஞ்சாட்சரியேபாஞ்சுடரெழுத்து பார்மீதில்எனையெழுந்தேகு
மென்கிறாய்வஞ்சகம்யென்மனதில்தானினைத்துவாட்டுகிரேனன்றெ
(னைவைகுறளே

ஈஸ்பரி தரு

மிஞ்சியேபேசுங்கஞ்சமலர்விழியே தஞ்சமேதடுப்பேன்
வஞ்சியரேஎன்செயலாவதொன்றில்லை
எழுந்துநடவுமவள் சொற்படிக்கி மிஞ்சி

ஈஸ்பரி தரு

சிதாரனர்உன்னைக்குடிவைத்த திருடன்பின்னால்போகுவாயடி
ஆதரவாகஅரசன்சடையில் அடங்கினகள்ளிஎழுந்திருடி

பொது வசனம்.

இப்படியாக உமையபார்வதி தேவியார் கங்காபவானியைப்பிடித்துத் தள்ளினபோது அது மனந்தாளாமல் மகாவிஷ்ணுவானவரிடம் வந்துசொல்வது.

மகாவிஷ்ணு கட்டளைக்கலிப்பா.

சர்வதேவர்களேசாக்ஷி சாக்ஷிநீங்கள்
என்தங்கைகெங்கையைசெய்யும் சர்ப்பனையைப்பாருங்கள்
அருமைமகளும்படும் அவதியைப்பாருங்கள்
அண்டாதகோபமாய் அலைகிறுளென்தங்கை
அரனும்பார்த்திருப்பதை அனைவரும்பாருங்கள்
அகங்கொண்டஎன்தங்கையை அடக்கஎன்னலாகாதோ
மர்ம்மமுடனிருக்கும் மயேஸர்பவானிக்கும்
மணமுடிக்காவிட்டால் மாயனுன் ஆவனே

பொதுவசனம்

இப்படி பகவானுனவர் பிரலாபித்து சபதம்கூறினபோது அருகில் இருக்கின்ற உமயபார்வதி காதில்கேட்டு சொல்லுவது காண்க.

ஈஸ்பரி-தாழிசை.

யேளிதமுறைத்துப்போகும் என்தமயன்பந்தயமும்
என்மகள் அஷ்டலக்ஷ்மி இன்பமுள்ளசொந்தமும்
சாலிவயல்செஞ்சடையில் பாலிநடனமிடுவதும்
சர்வேஸ்பராருகில்வந்து சங்கதியறியவே.

வசனம்

கேளுமென்னருகிலிராநின்ற அஞ்சலாட்சி என்தமயனிடசொந்தமும் என் குமாரத்தியாகிய அஷ்டலட்சுமி சொந்தமும் பவானியானவள் பரமசிவம் செஞ்சடையில் பதுங்கியிருந்த பத்தியமும் இன்றோடு போய்விட்டது இனிமேல் பரமகடவுளை ஒருவார்த்தைகே[ட்].கவேண்டும் வாருங்கள் தாதிமாரகளே

ஈஸ்பரி தரு.

அய்யாசெகதீசரேயென்னையிந்த அவதிக்குள்ளாக்கிவைத்தீர்
ஆகவல்லியமானதொருகெங்கையாளை சடாபாரந்தனில்வைத்தீர்
கைாதகங்கையென்றுகொண்டுவந்து அள்ளிசிதரவைத்தீர்
தோகைவுருவமானவிதங்களை சொல்லுவீர்லோகநாதா
வண்ணன்மகள்மீதில்மோகமாகி வாழ்வைக்குலைத்துவைத்தீர்
எண்ணயிரம்பெண்கள்மேல்மோகமாகி என்னையலையவிட்டீர்
என்தண்டையில்பிறந்ததொருகன்னிமீதில் தான்மோகமாகிநின்று
அண்டையிலிருந்துசர்ப்பமாக்கி அறியேனென்றேயுரைத்தீர்

33

ஈஸ்பரி விருத்தம்

சதிசெய்து எந்தனையும் அலையவைத்தாய்
தபஞ்செய்து தங்களிடம் பாகம்பெற்றேன்
பதிதனிலே உந்தனையும் விட்டுநானும்
பாரெங்குசத்திமய மாகிநின்றேன்
கதிரவனைத்தந்துதண லவிக்கவேண்டி
கலயமதில மள்ளி வைத்தபாவம்
எதிரியாயெனக்கும்உடல் பெண்ணுமாக்கி
யேத்திவந்தகாரணமும் அறிகிலேனே.

வசனம்.

சுவாமி லோகநாயகா நான் லோகாதிலோகமெல்லாந் திரிந்து அலைந்து தபம்செய்தும் தங்கள்மனதிரங்கி இடப்பாகந்தந்தீர் முன்காலத்தில் என்னுடைய நெத்திக்கண்ணைத் தந்து அதினுடையசுவாலையை அடக்கும்படி ஆகாயத்திலிருந்த சலத்தைக் கொண்டுவந்து கலயத்தில் ஆவாகனஞ்செய்துதாங்கள் நெற்றியில்வைத்தேன் அந்த சலமானது பெண்ணுருவமானதென்ன, இனிமேல்பாவியை சடாபாரத்தில் வைத்திருந்தால் தேவர்களும் சகலரிஷிகளும் கேலிசெய்வார்கள் அவளைவிட்டு இவ்விடத்தில்தானே யிரும் லோகநாயகா.

சிங்கீசர் கொச்சகம்

மாதேமலையரயன் மாமகளேமாலின்மகள்
எதுசெய்தாள் உன்னையவ ளென்னசொன்னாள் கன்னிகமே
ஆதரவாய்சேர்ந்திருந்து அருந்தணலுக்கவளிருக்க
சீதரனைபாராமல் சீரியடித்ததேனோ.

வசனம்.

கேளும் பெண்ணே உமைபார்வதா கங்கையானவள் உன்னை என்னசெய்தாள் நான் உன்னைஎன்னசொன்னேன் உன்தமையனென்றும் பாராமல் அடித்துத் தள்ளலாகுமா இனிஅவள்எங்கேபோய் விடுவாளென்று என்னைக்கண்டிதம் செய்குவாய் நமக்குநிந்தனைவந்து நேரும், நான் என்னமாய் பவானியைப்பிரிந்திருப்பேன் பெண்ணே பிராணநாயகி.

ஈஸ்பரி தரு.

மூலாதியானந்தசுரூபமே முத்திக்கொரு
சத்திசரஉத்தமரும் குத்தமும்செய்ய

எத்தனைநாள் காத்திருந்தீர்
சூலாதிசூலனே மாலானகங்கையை
மேலேசிரத்தில்வைத் துலாவக்குளிர்ந்தீரோ (மூ)

சிங்கீசர் தரு

லோலாபியானந்தஸ்ரூபி நோக்கியிடபாகத்தருள்
திரேகப்பிரிதியாகம் சோசவந்தசுரூபியே
வாவிசுவாலயால் மேலேநீவைத்திட (லோலா)

ஈஸ்பரி தரு

கலயமீதில்உருவாய் வைத்தேனோ
கட்டிசுகம்ஓட்டிப்பெற இட்டம்செய்துசிறத்தில்வைத்தேனோ
ஆலயவிடும்படி அண்ணனும்செய்ததோ
நிலையாதகூரும்நீர் நேசவிஸ்வாசரே (கலய)
ஆதியில்சலம்வைத்துப்போகையில்அண்டம்அடியளந்தபுண்ட
அண்டிவரகண்டுகலயம் கவிழ்ந்துபார்க்கையில் [ரீகா
சூதினால்சலம் தரைதனில்விழுகவும்
சோதிப்பிரகாசம்போல் தோன்றினாள்கங்கையும் (ஆதி)

சிங்கீசர் வசனம்

கேளும் பெண்ணே உமாபார்வதி ஆதிகாலங்களில்நெத்திக்கண் சுடர்தணியும்படி ஆகாயம்சென்று சலத்தைக்கொண்டு ஒருகலயத்தில் விட்டுப்போகையில் மறுபடி என்தமையன் இவ்விடம் வந்தார் அவர்வந்து என் சடாபாரத்தில் இருந்த கலயத்தை சாய்த்துப்பார்க்கையில் சலங்கொட்டி தரையில்விழுந்தது என்பாதத்தில்வீழ்ந்து இழிந்தபோது அவருடைய அஸ்தத்தினால் மறித்தார் மறித்த சலமானது பெண்ணுருவாயிற்று அந்தபெண்ணை முன்போலே சடாபாரத்தில் வைத்துவிட்டார் உண்மையான சங்கதி பிராணநாயகி.

பொது வசனம்.

இவ்விதமாக சிங்கீசர் சொன்னபோது அதைக்கேட்டு உமாபார்வதியார் மர்மமாயிருக்கும் சமையத்தில் வைகுந்தத்தி லிருந்த கங்கையானவள் விஷ்ணுவைக்காணும்படி வருவது.

கங்கை சீசபத்தியம்

சர்வஸ்த் ருத்திரன் சடாபாரந்தன்னிலே
சரசவுர்ப்பதமாக இருந்தயென்னை

35

நிரைவஸ்துவிஷ்ணுவும் நேயமுனிநாரதன்
நிறைந்தநோர்... தயனால விட்டதென்ன
பாவஸ்துபூமிலே பாவையும்எனைத்தள்ளி
பாமரையழைத்துமே போனதென்ன
குறைவிலாபவானிநான் உறவிலாதிற்கவும்
கோவிந்தர்பாதமதில் பிறந்தகுறையோ
சுரர்சுத்தராமர்முனி தேவர்கோமான்
துரிதமாய்போனவிதம் தெறிகிலேனே
அறிகுவோம்என்தந்தை அரண்மனைக்கு
பரிவாகவேநடவும் பாங்கிமாரே

கங்கை தரு

வாணிநான்பவானிநான் வாணிநான்குணமா மனோகர
பாநுகோடிபிரகாசசரசனும் திருமேனியின்மழு
சூலசங்கரர்பாணிவேணியில்வாழுகின்ற வாணி
பாவின்திருநீர்பாய்விரை சாவிலேயுலகம்
மூரிவீணுருடுமூலிதன்மகா மூலிதன்மகா
மேருவாழ்பவன் மாரன்பூஜிதனுர்மகிழ்ந்திட் வாணி
லோகலோகோபகாரமுக்கிய மேகரூபவுதாரவிக்கிரம
வாகயோக்கியதாரிநான்கன யோகயீஸ்பரிபாகயோகம் வா
நீடுகாணிதன்னோடுஉத்தமன் தாடுவாகிர்மகிருடிவார்புக
ழோடுநார்திருநேருகிரிபுரம் மேடுதகித்திடுமாடுமீசனுர் வா

கங்காபவானி கந்தார்த்தம்

தோழியேகேளுமம்மா சோதிசுரூபனைநான்விட்டு
ஒருநாழிகையிருந்ததில்லை என்னுயகருடனே கூடி
தாழ்விலாசர்வேசருக்கு சங்கரிமருந்துமிட்டு
கேழ்விலாதழைத்துப் போனாள்.

தரு

| | |
|---|---|
| கிரமமாகசவுத்தி | ரெய்த வர்ம்மமா |
| தர்மலோகநாதரும் | மர்ம்மமாய்சொன்னாரோ |
| கர்மமகலவிஷ்ணுகரிய | மாலுக்குரைப்போம் கிர |

பவானி வசனம்

கேளும் எனது தோழிமார்களே என் பிராணநாயகராகிய சிங்கீசர் சடாபாரத்தில் உலலாசமாயிருந்த யென்னை விஷ்ணுவானவர்

இலையிட்டு அழைததபடியால் நான் அவர் சடாபாரத்தைவிட்டுஇழி ந்தபோது அதை பூமுலையம்மனவள் என்னைத் தள்ளிவிட்டு பரம சிவத்தை அழைத்துக்கொண்டு போய்விட்டாள் நான் என்னமாய்த னித்திருப்பேன் இந்தசேதிகளை விஷ்ணுவினிடம் அறிவிப்போம்வா ருந்ததிமார்களே

கங்கை தரு

சிவனிடசெஞ்சடையில் என்தோழிகளா நான்
செல்வமுடனிருந்தேன் தோழிகளா
அவலமுடன்நாரதரும் கலகம்செய்து
அவனியில் இரக்கிவிட்டார்
பூமுலைசக்களத்தி என்னையவள்
பிடித்துமே தள்ளிவிட்டு
காமதகனமன்னரை அழைத்துக்கொண்டு
கமலாட்சி போனாளம்மா
திடுக்கென்றெழுந்திருந்து கொலுகலைந்து
சென்றவிதங்களை நானறியேன்
அடுக்குமோயிவ்வுலகில் என்தோழிமாரே
இந்தஅநீதி ஞாயமம்மா
தந்தைவிஷ்ணுவினிடம் என்பாங்கிமாரே
சதிருடனே நடந்து
அந்தஞாயமறிந்து அரனிடத்தில்
அடியாள் நடந்திடுவேன் சிவ

கங்காபவாணி வசனம்

கேளுந் தந்தையே சூரியனுக்கு அர்க்கியங்கொடுப்பதாக தேவ ர்கள் அனைவர்களையும் வரவழைத்து நாரதமுனிவனால் இலையிட்டு எ ன்னைவெளியாக்கிவிட்டபடியினால்பூமுலையம்மன் அறிந்துஎன்னைத்த ள்ளிவிட்டு சிங்கிஸ்பரரை அழைததுக்கொண்டுபோய் விட்டாளேஎ ன்னைத் தனியாகவிட்டுவர மனம்வந்ததா என்னசெய்வேன்கர்த்தனே

மகாவிஷ்ணு தரு

மனம்வந்தி ஆண்டியைச்சேவி உன்னால்
மானபங்கம்வந்து நேர
இனமானவளேயானால் ஈனச்சொல்மேலன்வரும்
உனதிஷ்டம்போலவே உதவாதுநடந்திடும் மன

37

பவானி தரு

இஷ்டபடிக்கு இலையளிக்க முனிவன்
இரங்கிடுமென்றவன் களிக்க
கஷ்டப்படுவீரென்று கபடமில்லா திருந்தேன்
நஷ்டமாய்ப்பூமுலை நாதனை அழைத்தாளே இ

மகாவிஷ்ணு தரு

போனவள்பின்னாலேபோய்விடும் இங்கே
பெற்றவனானல்ல பேசிடு
ஆணுவமாகத்தங்கை அடித்தாளேமதியாமல்
காணவேயெல்லோரும் கர்த்தனையிழுத்திடும் போ

பவானி தரு

உத்தமரையிழுத்தால்நாணுமே சர்வ
உலகம்பழிக்கிட மாகுமே
சத்தியால்கர்த்தரும் பித்தனாய்விடலாமே
சித்தத்திலெண்ணாமல் பெத்தவரேஉரைப்பீர் உத்

மகாவிஷ்ணு கவி

மல்லுசெய்துவழக்கிடாமல் மறிப்பார்கோடி
மர்ம்மமாயிருந்தாலும் வாரார்நாடி
நல்லதென்றுஇதுசமயம் நடந்தாயானால்
நலமுடனேமங்களகல் லியாணஞ்செய்வேன்
நில்லாதேதாதிகையில் ஓலைதந்து
நேசவிசுவாசருக்கு நேராய்க்காட்டி
வல்லவரும்இதையறிந்து வாராவிட்டால்
வம்புவழக்கிடுமல்லு செய்குவாயே

வசனம்.

கேளும் பவானியே ஆராகிலும் ஒருவருக்கொருவர் மல்லுசெய்தால் அதை மரிக்கும்படி வெகுபேர் வருவார்கள் நாம்மர்ம்மமாகயிருந்தால் யாரும் கவனிக்கமாட்டார்கள் இப்போது சிங்கீசருக்கு நிருபம் எழுதி தாதியிடங் கொடுத்தனுப்பும் அதற்கும் வராமல் பூமுலையம்மனிடத்திலிருந்தால் நீநேராகச்சென்று வம்புவழக்கிட்டால்யேதாகிலும் உனக்கு ஒரு வழியேர்ப்படும் பிறகு நான் வந்து உன்னை சிங்கீசருக்குகலியாணஞ் செய்துவைத்து அவர் சடாபாரத்தில் இருக்கும்படியாக செய்கிறேன் போய்வாரும் கங்கையே.

சென்னை-600 008.

பவானி தரு

ஆஆவிஷ்ணுவும்ஓலைஎழுதிடக் கூறினர் அம்மா-கூறினர்
ஓலையும்எழுத்தாணியுங்கையில் தாருங்கள் அம்மா-தாருங்கள்
ஆலமுண்டருள் நீலகண்டரை தேடுவீர் அம்மா-தேடுவீர்
சாலவேபூமுலையாளிருப்பிடம நாடுவீர் அம்மா-நாடுவீர்
மைக்குழல்என்சக்காளத்தி மாயமோ என்ன-மாயமோ
முக்கண்பகவர்க்குசொக்குப்பொடிவெரிமயக்கமோஎன்னமயக்கமே
நக்கனுக்குஅவளிட்டமருந்தது முரியுமோ-அம்மா-முரியுமோ
இக்கணமிருவோருமிருப்பதை அறிகிறேன் அம்மா-அறிகிறேன்
(ஆஆவிஷ்ணுவும்)

பவானி வசனம்

கேளுந்தாதியாகிய விசாலாக்ஷி இதோ சுவாமிக்கு நான் நிருபம் எழுதிதருகிறேன் அதைக்கொண்டுபோய் சிங்கீஸ்பரரிடங்கொடுத்துபூமுலையம்மனுக்கு தெரியாமல் அதிகசீக்கிரம் அழைத்துவாருங்கள் தாதிமார்களே

பவானி சூரணிகை

ஸ்ரீமதுதேவதேவநாம சிங்கீஸ்பரநாதர் திவ்வியமாகிய தாமரைப்பாதங்களுக்கு சாஷ்டாங்கதெண்டன் சுவாமி என்னிடக்ஷேமம் சுபமும் இவ்வோலையில் எழுதியடங்குவதில்லை நாயகர் பூமுலைதன்னையும் விட்டு பூவையிடம் வாரும் புருஷரத்தினமே

பவானி வசனம்

அம்மா யிந்த நிருபத்தைக்கொண்டுபோய் என் பிராணபதமான என்பிராணநாயகரிடங்கொடுத்து அவரை அழைத்துவாரும் பெண்களா

தோழி வசனம்

கேளும் அம்மா பவானியே உன் பிராணநாயகர் பேரைச்சொன்னல் அவரை இன்னரென்று விசாரித்து நிருபத்தைக்கொடுத்து அதிகசீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வருகிறேன் பவானியே

பவானி விருத்தம்

இவ்வுலகம்அண்டரண்டம் புவனம்யாவும்
எங்கெங்குந்தானகி இருக்கும்ரத்தினம்
அரவணையில்துயிலும் அரிஅயனுந்தேடி
அறியாதஆனந்த சர்சரத்தினம்

எவ்வர்ன்னம்அதிராசபோகரத்தினம்
இன்பமுள்ள அன்பரிடம் இருக்குமிரத்தினம்
திவ்வியசுத்துக்கேணி நகர்வாழுமிரத்தினம
சிங்கேசரத்தினமெனச் செப்புவாயே.

வசனம்.

கேளுந் தோழிமார்களே இந்த நிருபத்தைக் கொண்டுபோய் எனது பிராணநாதராகிய சிங்கீஸ்வரரிடங்கொடுத்து அவரை அதிசீக்கிரத்தில் அழைததுவாருங்களடி தாதிமார்களே.

பொதுவசனம்.

இவ்விதமாக பவானியம்மன் சிங்கீஸ்வரருக்குக் கொடுத்தநிருபத்தை யெடுத்துக்கொண்டுபோய் சுவாமியைக்கண்டு தாதியாகிய விசாலாட்சி சொல்லுகிற விதங்காண்க

தாசி விருத்தம்

சோலைசூழ்கயிலாயம் அமர்ந்தமூர்த்தி
சுந்திரரேஅந்தரியாள் அனுப்பவந்தோம்
ஓலையிதோபவானியம்மன் தந்தாள்பாரும்
உமையபூமுலையாளை விட்டுவாரும்
சாலமதுசெய்யாதீர் புவனலோலா
தயங்கிடுவாள்பவானியவள் காருங்லீலா
நாளையென்றுநீருரைத்தால் உயிர்நில்லாது
நாதனை யிதுசமயம் வருகுவாயே.

வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி கைலாசவாசரே தாங்கள்பவானியைத தனியாகவிட்டு வந்தபோது பவானியம்மன் ஊண்உரக்கமில்லாமல் பாசலித்து இந்த நிருப மெழுதித்தந்தாள் இதைவாசித்துப் பார்த்து பூமுலையம்மனை அறியாமல் சலுதியாக வர்ருமையாசுவாமி

பரமசிவன் விருத்தம்

வந்துமிகவுரைக்கின்றவகைக்காரி
நானுமங்கே வரக்கூடாது
முந்திவந்தவழிபிடித்துப் போவாய்பெண்ணே
முல்லைநகைபூமுலையாள் கண்டாளாகில்
எந்தனையுமுந்தனையு மென்செய்வாளோ
எளிதத்திற்கிடமாகு மிருந்தாயானல்
தந்திரமாய்பேச்சுகேட்டு வந்தாய்நீயு
மவள்மாய்கையானறிவேன் தாதிபோடி.

வசனம்

சேளும்பெண்மே தாதியாகிய விசாலாட்சி பவானியானவள் கொடுத்தனுப்பிய நிருபத்தை நீங்கள் எடுத்துவந்தீர்கள், வந்தசங்கதியை பூமுலையாளறிந்தால் என்னையுமுன்னையுமென்னசெய்வாளோ நீங்கள் இவ்விடம் வந்த சேதியை அவளறியாமுன்னமே நடந்துவிடுந்தாதி அஞ்சலாட்சி

பொது வசனம்

இப்படியாக சிங்கீசர் பவானியிடமிருந்துவந்த தோழிகளை பூமுலையம்மன் அறியாமல் போய்விடுமென்று சொன்ன மாத்திரத்தில் இச்சேதியை யறிந்திருந்த உமையவள் சிங்கீசரைப்பார்த்து யேதென்று சொல்லுகிறவிதங்காண்க.

ஈஸ்வரி-தரு.

என்னசொன்னுள் தாதிவந்து என்னசொன்னீர்பதிலுரை
யீசரே கைலாசரே என்ன

சிங்கீசர் தரு

அன்னமே அமுர்தமானே உன்னிதவாயினுலொன்றும்
வல்லையே சொல்லவில்லையே அன்ன

ஈஸ்வரி தரு

அன்னவள் பவானியரும் உன்னிடகிரகிலேற
ஏற்குமோ என்ன மார்க்கமோ-அன்

சிங்கீசர் தரு.

கன்னல்கதிரோனுக்காய் அன்னமேநங்கையைவைத்தேன்
அறிகுவாய் இவை தெரிகுவாய்-கண்

ஈஸ்வரி தரு

அறிந்திட்டேன் கதிரவனை தெரிந்திட்டதுலகமெல்லாம்
ஆத்தினேன் கையால் மாத்தினேன்-அறி

சிங்கீசர் தரு.

சிறந்திட்டக்கதிரவனை மறைந்திடஒருநாள்செய்தால்
தேருமோ தண லாருமோ-சிறந்

ஈஸ்வரி தரு.

மாயமருந்தாலே இந்த ஞாயமது பேசவந்தீர்
மார்க்கமோ எனக் கேற்குமோ-மாய

41

சிங்கீசர் தரு.

அணங்குபஞ்சாட்சரியே மாயமருந்தெனக்கில்லை
அறிந்திடு திறமாய் தெரிந்திடுவாய் (அண)

ஈஸ்பரி விருத்தம்.

சக்களத்தி மருந்திட்டு வுனைமயக்கி
தங்கிடவே சிரசின்மே லேறிநின்றாள்
சொக்குபொடி தந்துமவள் தாதிகையில்
சுருளோலைப் பதிலுமக்கு அனுப்பிவைத்தாள்
பக்குவமா யெனையறிய வந்ததாதி
பகருவீர் பவானியவள் அனுப்புஞ்சேதி
இக்கணமே யெந்தனுக்கு வுரைத்தாலாச்சு
இல்லாம லுங்களைநான் வதைசெய்வேனே.

வசனம்.

கேளுமையா சுவாமி லோகநாயகா, என் சக்களத்தியான பவானியானவள் தங்களுக்கு மாயமருந்திட்டுமயங்கச்செய்து உம்முடைய சிரசின்பேரில் ஏறினாள் அதுபோதாமல் இப்போது சொக்குப்பொடிதந்து தங்களை அழைத்து வரும்படியாகச் செய்திருக்கிறாள். அதுஇருந்தாலு மிருக்கட்டும். கேளுங்களடி தாதிமார்களே, உங்களை பவானியானவள் எதுக்காக இவ்விடம் அனுப்பினாள். நீங்கள் வந்தசேதியை ஒன்றும் ஒளியாமல் எனக்குத் தெரியச்சொல்லுங்களடி தாதிமார்களே.

தாதி தரு.

சந்திரசேகாரிங்கு வந்தநாளாய் பார்த்ததில்லை
சுந்திரரைப்பார்க்க வந்தோம் அந்தரியாளே (சந்தி)

ஈஸ்பரி தரு

தந்திரவார்த்தைகளேண்டி எந்தனுடனே
சுந்திரர்க்குஓலைபது தந்ததில்லையோ (தந்தி)

தாதி தரு

இல்லையது ஓலையது கொண்டுவல்லையே
யீஸ்பரரைபார்க்கவந்த துண்மைதானம்மா (இல்)

ஈஸ்வரி தரு

நில்லடிதாதியேஉபகாரம் செய்கிறேன்
கலலதுஉங்கள்கொண்டையை நானறுத்தேனே (நில்)

தாதி கவி

அன்புடனிருந்தகங்கை அரனக்குழலைதந்தாள்
தென்புடனெடுத்துவந்தோம் சேதிகளறிந்திடாமல்
நண்புபூமுலையாள் தானும் நயத்துடனருகில்வந்து
சண்பகவாளால்கொண்டை சங்கரியருத்திட்டாளே.

வசனம்.

இப்படியாக பவானி அனுப்பிவைத்த தாதிகளை பூமுலையம்மன் அழைப்பித்து அந்த தோழிகளுடைய கொண்டையை அறுத்து அடித்துத் துரத்துகிறபோது சிங்கீசர்கண்டு தடுத்து யேதென்றுசொல்வது காண்க.

## சிங்கீசர் விருத்தம்.

உந்தனுக்குநயந்துரைத்த தாதிதன்னை
ஓடிசிகைகூந்தல்தனை யருக்கலாமோ
எந்தனையும்நீயறிந்தாய் உண்மைசொன்னேன்
இதைத்தள்ளிசடந்திடவும் ஞாயமுண்டோ
சொந்தமுள்ளதாதியரைப் பங்கஞ்செய்தாய்
சாபிப்பாள்உந்தனுக்கு பாபமாச்சே
சுந்தரியேகாதுனக்கு சொந்தமானல்
தோகையர்க்குகொஞ்சம்சொந்தம் இல்லையோதான்.

வசனம்.

கேளும்பெண்ணே உமாபார்வதா பவானியானவள் யென்னை வரும்படி நிருபமெழுதி தாதியர்கள்கையில் கொடுத்தனுப்பவும் என்னிடத்தில் அவர்கள் காண்பிக்கவும் நான் வருகிறதில்லையென்று அவர்களுக்கு சொல்லவும் அதற்குள் நீவந்து அவர்களை மரித்து அவமானமாக கொண்டையை அறுத்துவிடலாகும் இதை பவானியானவள் அறிந்தால் உன்னை சாபிப்பாளே உனக்கு பாபமாச்சுதே அதுவுமன்றி நான் உனக்கு அதிக சொந்தமாக யிருந்தபோதிலும் அவளுக்கும் கொஞ்சம் சொந்தமாகிலும் இல்லையோ சொல்லும்பெண்ணே பிராணநாயகி.

ஈஸ்பரி தரு

என்னமோகமோ இது ஏதுமோகமோ
பன்னும்பவானிமீதில் பட்சம்வைத்தீரே
இன்னமேனிருக்கிறீர் யீசரேவிஸ்வேசரே (என்)

அன்னவளத்தசீமாட்டி என்னதபம்செய்வாளென்று
உன்னிடசடாபாரத்தில் ஒளித்துவைத்திருந்தீரே என்

மண்டையைக்கீறிமகராசிமருந்திட்டாளோ
அண்டையில்இருந்தநாளும் அறியாமல்போனேனே என்

எண்டிசையுலகெங்கும் யீசனென்றுயிருக்க
கண்டோர்பழியார்களோ கங்கையைவைத்திருந்தாலும் என்

அரியின்மகளுக்கு அதிசெயமாயிருந்தால்
தெரியாமல்செஞ்சடையில் சிவனைவைத்திருந்தீரே என்

திருக்கடை திருக்காஞ்சி திருவுங்கம்பாநதியில்
தபஞ்செய்தவளுக்கு அரனைபாகந்தந்தீரோ என்

கட்டைஎன்னிடத்திலும் கருத்தவளிடத்திலும்
ஒட்டுறவில்லாதிருந்தால் ஒவ்வுமோவிஸ்வநாதா என்

மட்டிஎன்சக்காளத்தி இட்டமருந்துனக்கு
விட்டுமுறிந்திடுமோ விமலாசர்வேஸ்பரரே என்

பொது விருத்தம்

சங்கரிசிங்கீஸ்பரரை நிந்தைசெய்ய
  தாதியர்கள்சேதி யறிவிப்பதாக
அங்கமதுநடுநடுங்க அடியும்பட்டு
  அய்யமுடன்மைவிழியும் அலச்சலாகி
நங்கைபூமுலையாளும் செய்தாளென்று
  நாடியே அரண்மனைக்கு வருகும்போது
மங்கையர்தங்கையரும் விறகமீறி
  மாதுசேடியர்களோடு உரைக்கின்றாளே

வசனம்.

அகோதெப்படியென்றால் பூமுலையம்மன் சிங்கீஸ்பரரை நிந்தித்து இருக்கும்போது நிருபங் கொண்டுவந்த தாதிமார்கள் அடிப்பபட்டு அலச்சலாகி பவானியம்மனிடம் வந்து பிர்மித்து நிற்கும்போது பவானியம்மன் தாதிமார்களைப் பார்த்து சொல்வது.

பவானி தரு

என்னசொன்னாரம்மா சுவாமிநாதர் ஏதுசொன்னாரம்மா

முன்னேபோவென்றுன்னை மோகபரமேஸ்பரநாதர்
பின்னேவருகிறேனென்று போகச்சொன்னாரோதோழி என்

வழிபார்த்துநீவரக்கண்டு என்னிடமேலே
நழுவிப்போகுதேபிராண நாதர்வருவாரென்று என்

வெள்ளைவிடைமேலேறும் விமலருடன்வாராமல்
பள்ளியறைசிங்காரம் பண்ணச்சொன்னாரோதோழி என்

முத்தானவாய்திறந்து சுத்துக்கேணிசிங்கீசர்
உத்தாரமென்றுசொன்னார் உரையும் புண்ணியமம்மா என்

பவானி வசனம்.

கேளுந்தோழிமார்களே நீங்களேன்வந்து மர்மமாக நின்றுக் கொண்டிருக்கிறீர்கள் சிங்கீஸ்பரர் உங்களைமுன்னே போகச்சொன்னாரோஅவர் பின்னால் வருகிறேனென்று சொன்னாரோ இல்லையோ தெரியச்சொல்லும் தோழிமார்களே.

தாதி தரு.

சக்காளத்திக்குஞ்சக்காளத்திக்கும் சண்டையிருக்க
தரவுவந்ததாதியர்க்குக் கொண்டையில்லையே
திக்கில்லாமல்அடியும்பட்டு தியங்கிவருக
சிங்கீஸ்பரன்சேதிகேழ்க்க உந்தன்செருக்கோ
வள்ளனும்பூமுலைநீயும் கொள்ளஇல்லையே
உள்ளவேமடக்கிபங்கம் செய்தாளேபாவி
கள்ளமுடன்பூமுலை மருந்தால்மயங்கி
கர்த்தனுமுனைமறந்தார் இன்றுதியங்கி
யேகபோகமாகயிரு வோருமிருக்க
யேந்திழைநீயிவ்விடத்தில் மக்கியிருக்க
பாகம்பெற்றபூமுலைமேல் பட்சமிருக்க
பவானியேசிங்கீஸ்பரன்மேல் நீயும்உருக
ஆண்டியைநீநம்பவேண்டாம் அந்தரியாளே
வேண்டியழைத்தாலுமிங்குவரப் போறதில்லையே
வண்டணிகுழலாளிட போறதில்லையே
கண்டவர்களால்மரியப் போறதில்லையே சக்

தாதி விருத்தம்

ஆத்திரமாய்உன்வார்த்தைக் கேட்டுசென்று
அவதிமெத்தப்பட்டுவெகு அடியும்பட்டோம்
எத்தரியசிங்கீச நாதருக்கு
யெத்தனைசொன்னாலும் வரக்கூடாதென்றார்
மூத்தவளுன்சக்களத்தி மோகமம்மா
மோகத்தில்வெகுமோக மோகத்தாலே
பாத்திருந்தாயென்னையுமே அவர்கண்ணாலே
பண்ணாதகோலமெல்லாம் பண்ணினாளே.

வசனம்

கேளும் பவானியே உன் வார்த்தையைக்கேட்டு நாங்கள்சென்றுசிங்கீஸ்பரரிடம் நீகொடுத்த நிருபத்தைக் கொடுத்தபோது பூமுலையம்மன் மயக்கத்தில் அவர் இவ்விடம் வர ஒண்ணாதென்றார் அதைக்கேட்டு நாங்கள் திரும்பிவருகிறபோது உன் சக்களத்தி யெங்களை மடக்கி அடித்து கொண்டையை அறுத்து பண்ணாத அலங்கோலங்களெல்லாம் செய்தனுப்பினாளம்மா தாயே

பவானி தரு

என் குணத்துக்கிணையில்லையென்றிருந்தேனே — என் தோழிமாரே
யேர்ப்பட்டுக்கொண்டுயிருப்பாளென்றறியேன் — தோழிமாரே
இவளாசையைப்போலெனக்கிருக்காதோஎந்தன் — தோழியாரே
எண்ணமல்நடப்பதும் இதுஞாயமோசொல்லும் — தோழிமாரே
பூமுலைமயக்கத்தில் பூராரென்றிருந்தேனே யென் — தோழிமாரே
பூந்தும்பூமுலையாளைபோட்டிசெய்துவைத்தாரே — தோழிமாரே
பரமர்பூமுலைமேலே பட்சம்பாதியம்மா — தோழிமாரே
பாரினிலிப்படிபண்ணுவதுநலமோ — தோழிமாரே

பவானி விருத்தம்

சுந்திரசிங்கேஸ்பரரும் யெனைமறந்து
தோகையிந்தபூமுலையாளை வைத்திருக்க
தந்திரமாய்தாதியரே யினியிருந்தால்
சக்களத்திஎன்னுளும் ஓட்டவைக்காள்
அந்தமுள்ளநாரதனே சபையில்என்னை
அரனைவிட்டு அறுதியாய் அழைத்துவிட்டாய்
எந்தனைநீபரமனிடம் சேர்க்கவேண்டும்
இல்லாமல்உந்தனைநான் விடவொண்ணாதே

வசனம்.

கேளும் தாதிமார்களே சிங்கீஸ்பரர் என்னை மறந்து பூமுலையம்மனிடத்தில் உல்லாசமாக யிருக்கின்றாரே இந்தசமையம் நான்போகாமலிருந்தால் நம்மையாரோவென்று கிட்டநாடவொட்டாமல் செய்வார்கள் கேளும் நாரதமகாமுனிவரே பரமசிவத்தினுடைய சடாபாரத்தில் மறைந்திருந்த யென்னை இந்த சபையில் அழைப்பித்துவிட்டு வேடிக்கைபார்க்கிறீர்களல்லவா நீர் இந்தட்சணங்கொண்டுபோய் சிங்கீசரிடம் விட்டாலாச்சுது அப்படி விடாதபட்சத்தில் உமக்கு வீணை நிந்தனை வந்து நேரும் நாம் சுவாமியிடம் போவோம் வாருமையா நாரதமகாமுனிவரே.

நாரதர் தரு

அன்னையே அந்த அம்பலவாணரிடத்தி லழைக்குறாய் என்னையே
பொன்னும்பூமுலையாளும் என்னைக்கண்டாளேயாகில்

சு. பொங்கிஎன் மீதினில சங்கையாய்எனைவைவாள்
கன்னகையே அங்கு நான் வருவேனோ அ

பவானி தரு

முனிவனே சிவன்முடியிலிருந்தஎன்னை கூடியிலழைத்துவிட்ட முனிவ
கனித்துக்கனிந்துருகி கலங்கித்தவிக்கலாமோ [னே

சு. கட்டிமுக்கர்த்தர் சிமாட்டியாள்பெருமைகைய
யாட்டுவேன் பூமுலை காட்டத்தையரியுறேன் மு

நாரதர் தரு

வாருமே அக்குவன்னலின் பூமுலை உல்லாசமாகிபேவாருமே
வாரும்நாதன் பின்னாலே பேருவுக்கும்மேற்காலே

சு. வங்கணமென்றுரு மலையாளமிருப்பது
சிங்கிசர்மங்கையும் தங்கியங்கிருப்பாள் வா

பவானி தரு

பாருமே அந்த அரனிடபூமுலை அருகிலிருந்தாஸ்பாருமே
நாரும்பூவும்போலவே சேர்ந்துயிருந்தவர்களே

சு. நாதனையணுகாமல் வேதனைசெய்குறாள்
பாதகிநான்சொன்னால் யேதேதுசெய்வாளோ பா

நாரதர் விருத்தம்.

பகிரதியேமலையாளம் வந்தோமிப்போ
பார்த்தாயாபூமுலையின் யிருப்பிடத்தை
செகதீசர் அரண்மனையில் இருப்பாரம்மா
செல்லுவீர்நான்வரவுங் கூடாதிப்போ
பகையாளும்பூமுலையாள் என்னைக்கண்டால்
பகூழுடன்வைத்திடுவாள் பங்கம்போகும்
நகரத்தில்வந்தேனென்று உரைத்திடாதே
நான்போறேன் நாதரிடம்சொல்லுவாயே

வசனம்.

கேளும் பவானியே இப்போது நாமிருவரும் மலையாளதேசம் வந்தபடியால் அதோயிருக்கிறது பார்த்தியா பூமுலையம்மன் இருப்பிடமாகிய மாளிகை நீ அவ்விடம்சென்றால் சிங்கீசரும் பூமுலையம்மனும் மகா உல்லாசமாக இருப்பார்கள்நீ அவரிடம்செல்லும் நான் போய்வருகிறேனம்மா தாயே.

பொது வசனம்.

இவ்விதமாக நாரதமுனிவர் பவானியம்மனுக்கு சிங்கீசர் இருக்குமிடத்தைக் காண்பித்து அவர் இருப்பிடம் சேர அப்போது பவானியம்மன் சிங்கீசரைப்பார்த்து சொல்வது.

பவானி-தரு

நெருப்பின்மீதினில் வரும்மயூரமும்
புயலிரங்கிடி லுள் அகமகிழ்ந்திடும்
அருக்கன்லட்சம் யோசனை அவுனியி
லரியதிரை கமலனே யகமும்
இருக்குமருட்டியோசனை யில்நீலமும்
இருந்துவந்திடல்மிலகு மென்தனமே
உருக்கமாகிய பிராணவல்லபரே
உன்பாதபங்கயம் நமஸ்து நமஸ்து.

வசனம்.

பொருப்பென்னப்பட்ட பர்வதத்திலே வாசமாயிருக்கப்பட்ட மயூரமாகிய மயிலுக்கும் புயலென்னப்பட்ட மேகஞ்சூழ்ந்தால் எத்தனை சினேகிதமாகவும் லட்சம்யோசனையிலிருக்கப்பட்ட சூரியனுக்கும் தடாகத்திலிருக்கப்பட்ட புஷ்பத்துக்கும்எவ்வளவுசினேகமோ அவ்வளவுசினேகமாகவும் இரண்டுயோசனை தூரத்தி லிருக்கப்பட்ட நீலோற்பல புட்பத்திற்கும் எவ்வளவுசினேகிதமோ அவ்வளவு பிராணசினேகிதமுள்ள பிராணரட்சகா தங்கள் பாதங்களுக்கு நமஸ்தே நமஸ்த்து.

சிங்கீசர் சீசபத்தியம்.

அந்தமிகுங்குழலாளே அரும்புள்ளநகையாளே
அஷ்ட்டபாக்கியம் நமஸ்த்து
அம்புசாட்சிசந்திர மண்டலமதனிலே
சகலசுபசந்தோஷ சாம்பிராச்சியநமஸ்த்து
சாசவதனியிந்திர கோபத்திலுமிலகுமிதமுடையாளே
இஷ்ட்டபாக்கியம் நமஸ்த்து
எனக்குநீவந்தனம் செயுங்கமலகரத்தாளே
வகையாகயெந்நாளும் வாழ்பவானி
எந்நாளும்பூமுலையின் சொல்லக்கேட்டு
எப்போதுநம்முடன் கூடி யிரும்பவானி

வசனம்.

கேளும் பெண்ணே பவானியே நீ எந்நாளும் சுகமாயிருப்பாய் நீஎன்னஎப்போதும்பூமுலையாள்சொற்படிகேட்டுக்கொண்டுமனமகி

ட்சியுடன் இரும்பெண்ணே பவானியென்று சிங்கிஸ்பரர் பவானிக்குச் சொன்னபோது அருகானமயில் இருந்த உமையபார்வதி பவானியைப்பார்த்துச் சொல்லுவது.

ஈஸ்பரி தரு.

பாமர்முடியில்நீயும் பவனித்திருப்போமென்று
பட்சம்வைத்து ஒதுருய் ஜானவிசவுத்தி

பவானி தரு.

உறம்பெற்றசத்தியிடம் ஒன்றுநான்பேசவில்லை
ஒத்தியில்வந்துரைக்காதே சத்தே எந்தன்முன்

ஈஸ்பரி தரு.

உலகத்திலுற்பத்தி உறவுமும்எண்ணுது
உன்னாலாவதென்னடி ஜானகிசவுத்தி

பவானி தரு.

கலைநிகர்சுரோணிதங் கலந்தால்கருலாச்சே
கருத்தில்நினைத்துப்பார் சத்தே எந்தன் அத்தே

ஈஸ்பரி தரு.

திருமாலின்பாதத்தில் சிசுவாகிவந்தவட்கு
தெரிந்ததந்தைதாயேது சானவி அடிசவுத்தி

பவானி தரு.

அறிவாாகள் உலகத்தில் ஆதிசத்திக்குத்தந்தை
யாவரறிந்திருப்பார் சத்தே யெந்தன் அத்தே

ஈஸ்பரி தரு

நாலுசபையிலென்னை நடுவிலேகுந்தவைத்து
நாதன்கட்டினாடி-தாலி குடிகேடி

பவானி தரு.

சூலாயுதற்குமுந்தி சுரூபியாய்நின்றபோது
சூழ்ந்துக்கட்டினாடி தாலி சீமாலி

ஈஸ்வரி தரு

விமலன்பாதாரவிந்த கமலத்தைநாயமாக
விட்டிடுவிட்டிசும்மா ஜானவி சவுத்தி

பவானி தரு

விட்டிடுவேனோதாலி வேந்தர் தரிக்காமுன்னம்
வேறுவிதமுண்டோடி சத்தே எந்தனத்தே

ஈஸ்பரி தரு

சிதரன்உன் தகப்பன ே. . தனைசெய்தாரடி
சிவன்கரத்தைவிட்டிடடி ச. ... மி ..வக்தி

பவானி தரு.

காதகமாகநீயும் கர்த்தரிடத்திலோதி
காணுதழைத்துவந்தாய் சத்தே எந்தன்

ஈஸ்பரி தரு.

வீணுக்குமாலையிட்டு பவானிஉன்னிடம்விட்டு
விபரமில்லாதிருந்தேன் சானவி அடிசவுத்தி

பவானி தரு

வாரணிசெஞ்சடைமீதில் காணுதிருமென்பதைஉற்று
பாரும்மனதில் சத்தே எந்தன் அத்தே

ஈஸ்பரி தரு.

நாடிசிவனிடத்தில் கூடிக்குலாவும்போது
நானறிந்தால்சொல்லேன் சானவி என்சவுத்தி

பவானி தரு.

மோடிவைத்துக்கம்பையில் நாடித்தபம்செய்கையில்
ஓடியிடமேதென்றீர் சத்தே எந்தன்அத்தே

ஈஸ்பரி கந்தார்த்தம்

சரிசரியாகப்பேசிசண்டையுங் கொடுக்கவாராள்
அறிவீரோதாதிமாரே அவளிடசேதியெல்லாம்
பரமனார்முடியிலேசி பதுங்கினசக்காளத்தி
உறவுகொண்டாட வந்தாள்

தரு

ஒட்டவைப்பேனோ இவளைநானும் சட்டைசெய்வேனோ
கட்டும்வித்தைகள்பேசி — காட்டவந்தாளேயேசி
முட்டமுடியதாசி — மினுக்கவந்தையோவீசி ஒட்

ஈஸ்பரி வசனம்

கேளும் தாதிமார்களே இவளென்ன சரிசரியாக என்னுடனே பேசி சண்டைக்குவந்தாளல்லவா இவள் இத்தனைநாளாய் என்னை

அறியாமல் லோகநாயகர் சடாபாரத்திலிருந்தாளென்னை ஒட்டவொட்டாமல் கலைந்தவளல்லவா இப்போது எனக்குத் தெரிந்துவிட்டதென்று சலிவைப்பேசி உரவாட வந்தாளல்லவா அப்படி வந்தபோதிலும் இவளை ஒட்டவைப்பேனோ வந்த வழியைப் பார்த்துக் கொண்டு ஓடிப்போகச்சொல்லுங்கள் தாதிமார்களே

பவானி அகவல்.

அம்மா மங்கைகள் அனைவருங்கேளுங்கள்
அம்மம்மா இவ்வார்த்தைக்கு அனைவரும்சாட்சி
கேளுங்கோளெல்லாம் இக்கேள்வியைச்சும்மா
எங்காளுமிப்படியென் னாயகர்க்குரைத்து
சலுவானவார்த்தையால் சதிகளுண்டாக்கி
என்வார்த்தைவசனங்கள் யேறஒட்டாமல்
ஒக்கவேயென்னையும் கூடவொட்டாமல்
நல்லசொக்குமாயப்பொடி தூவினாளம்மா
வண்மையாயிவளுந்தன் வார்த்தைக்குவந்தால்
நன்னாயிருந்ததம்மா நளினபூமுலையாள்
சாமியேநீமெத்த கனசாலிபோதும்
சுவாமியேயெழுந்திரும் சரசமாய்யேருவோம்

வசனம்.

கேளுங்கோள் தாதிமார்களே இந்த வார்த்தைக்கு அனைவரும் சாட்சி எங்காளும் என்னாயகருக்கு ஆகாதவார்த்தைகளைப்பேசி என்னைக்கூட ஒட்டாமல் செய்திருக்கிறாள் இப்போது சொக்குப்பொடி தூவி லோகநாயகரைக்கலைத்து அழைத்துவந்தாள் அப்படியிருக்க, இவள் இனிமேல் என் வார்த்தைக்குவந்தால் மரியாதை குறைவாகும் நீ அந்தமட்டிலேதானே யிரும் கேளும் சுவாமி லோகநாயகரே நாம் கைலாயம் நாடி நடப்போம் வாருமையா சுவாமி.

ஈஸ்பரி தரு.

என்னடி பகிரதிநீ மிஞ்சுறாய்

பவானி தரு.

யேதடிமிரட்டுறாய் பூமலையே

ஈஸ்பரி தரு.

நல்லதாகட்டும் என்முன்னில்லாதடி நில்லாதடி

பவானி தரு.

அடிநல்லதானால் கொண்டுகட்டடி கொண்டுகட்டடி

ஈஸ்பரி தரு.

நீயெதிர்த்துப்பேசவானாயென்னடி யென்முன் என்னடி

51

பவானி தரு

அதட்டி அடிக்கவாருய் யென்னடி அடியென்னடி

ஈஸ்பரி தரு

நீகையைநீட்டிப் பேசலாமோ பேசலாமோ

பவானி தரு.

நீகையைநீட்டிவாராய் என்னடி வாராய் என்னடி

ஈஸ்பரி தரு.

இவள் சரிக்கிச்சரியாப் பேசலாச்சுதே பேசலாச்சுதே

பவானி தரு

எங்கள் சுவாமி சலிவை யுனக்காச்சுதே உனக்காச்சுதே

ஈஸ்பரி தரு.

இந்தவீட்டுசலிவையுனக் காச்சுதோ உனக்காச்சுதோ

பவானி தரு.

இந்தஐயன்சலிவையுனக் காச்சுதே உனக்காச்சுதே

ஈஸ்வரி தரு.

உன்வாயின்மேல்அடித்துக் கிழிப்பண்டி இப்போ கிழிப்பண்டி

பவானி தரு

உன்வாய்பல்லுதிர அடிப்பேனடி அடிப்பேனடி

ஈஸ்வரி தரு

என்தன்பஞ்சணைமேல் தூங்கலாச்சுதே தூங்கலாச்சுதே

பவானி தரு

என்படுக்கைவீடு நுழையலாச்சுதே நுழையலாச்சுதே

சிங்கீசர் கவி

காத்திருந்தான் கரியமாலும் நாரதன்தான்
  கலகங்கள்செய்திடவும் மனதிலெண்ணி
ஆத்திரமாய்சண்டைசெய்ய வேண்டாம்நீங்கள்
  அரன்நடுவில்நானிருக்க ஞாயமுண்டோ
பார்த்திருந்தாள்பூமுலையாள் உனையிழுக்க
  பவானியேசரிசரிக்கிப் பேசலாமோ
சொந்தமுள்ளதேவர்களும் ஓடினர்கள்
  என்தொல்லையதை தீர்ப்பவர்களறிகிலேனே.

வசனம்.

கேளும் இவ்வுலகங்களுக்கு அரசியாகியபெண்கள்நாயகமே நம் மூவரையும் கலகஞ்செய்யும்படிக்கு மகாவிஷ்ணுவும்நாரதரும் ஏற்ப

டார்கள் அதையறியாமல் நீங்களிருவரும் நான் இருக்கிறேனென்று எண்ணிப்பாராமல் சண்டையை விடாமல் தொடுவழக்கிடுகிறீர்கள் வந்திருந்த தேவர்களும் இதற்குப் பதில் சொல்லாமல் ஓடிப்போய் விட்டார்கள். இந்த கொடுமையைத் தீர்ப்பவர்கள்இவ்வுலகத்தில் யாருமில்லையே உங்கள் சண்டையை நிறுத்துங்கோள் பெண்கள் சிகாமணிகளே.

பொதுவசனம்.

இப்படியாக பரமசிவம் வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்போது முன்னால்தபம் செய்துக்கொண்டிருந்த கலைக்கோட்டு மகாரிஷியானவர் வருகிறவிதங்காண்க.

கலைக்கோட்டுரிஷி கவி.

பகவானுந்தியங்கிக்கொண்டு பதரியேயிருக்கும்போது
உகாந்தகாலங்களாக உருமையாய்சபங்கள்செய்யும்
கனகபோதகத்திருந்த கலைக்கோட்டுரிஷிபறிந்து
கிகரிலாசிவன்முன்பாக நேபனும்வருகின்றாரே.

கலைக்கோட்டுரிஷி தரு.

கற்றோர்சித்தர்க்கதிபன் மெத்தஉல்லாசமாக
கலைக்கோட்டுரிஷியும்வந்தார் வேடிக்கையாக — கலைக்

அத்திமுகவன்பாதம் — பெற்றுதவம்புரிந்த
பத்தியுடன்சிவங்கள் — வெற்றியுடனறிந்து — கற்

பாதக்குறடணிந்து — பாம்பணிந்தோனைப்பணிந்து
வேதமறிந்துசிவ — நாதன் தனைப்பணிந்து
ஓதிமௌனத்துடன் — நாதன்பரமனைக்காண — கற்
பரமன்செஞ்சடாதரி — பவானிபூமுலைமீரி
ஞானமுனிவன்செய்தான் — வேணைக்கலகமதை
காணதேவர்களெல்லாம் — ஞானம்திருந்திட — கற்
கண்டோர்தொழுதுகளிக்க — கழுத்தில்மாலையுந்துன்ன
அண்டர்நாயகருக்கு — விண்டுமனதுநோக
கண்டிகல்கந்திர்த்து — அண்டிஆதரித்திட — சற்

கலைக்கோட்டுரிஷி தேவாரம்.

திரிபுறத்தரனேசெஞ்சடாதரனே செங்கதிர்தரித்திடுஞ்சோதி
அரியயன்காணுவம்பலவாணு அருள்தருமனைவர்க்குமுதலே
காருண்ணியதேவாகங்கையின்சமேதா கர்த்தனேநித்தியாநந்தா
பார்வதிபாகாபயமருத்தாளாய் பதவிதந்தளித்திடும்தேவா.

வசனம்.

ஸ்ரீகைலாசவாசா அகண்டா திரிநேத்திரா மான்மழுதரித்தவா பார்வதி சமேதா ரிஷபவாகனரூடா அடியேன் உமதுபாத பங்கயம் நமஸ்த்தே நமஸ்த்து

சிங்கீசர் கவி

சாலோகசாமீப சாரூபசாயுச்சிய
 சதகோடிசிரஞ்சீவி ஆசிர்வாழி
மேலானகலைக்கோட்டு ஞானமாமுனிவனே
 மெஞ்ஞானஆனந்த முனியேவாழி
மாவின் மகள்கங்கையும் சாலபூமாலையு
 மல்லுசெய்விதமதை யறிகிலேனே
வேலானசத்தியை விலக்குவாரில்லையே
 வேதமுனியிதையறிந்து உரைசெய்வாயே

வசனம்.

வாழிவாழி யெழுந்திரும் கலைக்கோட்டு மகாரிஷியே நீயென்னை உகாந்தகாலமாக என்னைக்காணும்படி தபம்செய்தபடியால் உமக்கு சாலோக சாமீப சாரூப சாயுச்யமென்னும் நாலாம்பதவி தந்தேன் சிரஞ்சீவியாகயிருக்கக்கடவது இப்பவும் பூமுலையாளும் பவானியும் விரோதமாக சண்டையிடுகிறார்கள். இதை விலக்கும்படியானவர் ஒருவரும் இல்லை இதையறிந்து பூமுலையாளுக்கு இதக்கமான வார்த்தையை வசனித்து பவானியைச் சடாபாரத்தி லிருக்கும்படிசெய்ய வேண்டும் கலைக்கோட்டு மகா முனிவரே.

ரிஷி. ஆனால் அப்படியே தெரிந்துகொண்டு வருகிறேன் சுவாமி

கலைக்கோட்டுரிஷி வசனம்

கேளுமம்மா தாயே பரமேஸ்பரி சிங்கீஸ்பரார் தங்கள் பேரில் வருத்தப்படுகின்றார் உமக்குப் பவானியம்மனுக்கும் விகடக்குரோதம்நேரிட்ட விதமென்ன நீங்கள் ஒருவருக்கொருவர் வாதுசெய்தால் உலகத்தோர் வசைமான சொல்சொல்லும்படிநேருமே ஆகையால் நடந்தவிர்த்தாந்தங்களை சொல்லுமம்மா தாயே.

ஈஸ்பரி தரு.

உரைத்திடுவேனிந்த சேதிகளை முனியே சேதிகளை
உத்தமர் அவர்செய்த சூதுகளை

கலைக்கோட்டுரிஷி தரு

திருத்தமாகமனதில் வருத்தமென்ன தாயே
செகதீசர்செய்த நஷ்டமென்ன

ஈஸ்பரி தரு.

சந்திசடாதரர் முடிமீதில் முனியே முடிமீதில்
தங்கும்படியேபெண் இருக்கலாமோ

கலைக்கோட்டுரிஷி தரு

கங்குல்இருள்நீக்கும் கதிரோனுக்காய் தாயேகதிரோனுக்காய்
கங்கைதன்னையேவைத்தார் சிங்கீசர்

ஈஸ்பரி தரு.

சுந்திரர்க்குகதிரோன் சுடர்விளக்கோ முனியே சுடர்விளக்கோ
தோகைதனை வைக்க நீதியுண்டோ

கலைக்கோட்டுரிஷி தரு.

அங்கரியேமுந்தி ஆதியிலே தாயே ஆதியிலே
அரன்தனக்குகதி ரோனைத்தந்தாய்

ஈஸ்பரி தரு.

தந்தேனென்றுசாட்சி சொல்லி முனியே சாட்சிசொல்லி
சங்கரும்உன்னை அனுப்பினரே

கலைக்கோட்டுரிஷி தரு.

சங்கரியேகதிரோன் தனைலவிக்க கதிரோதன் தனைலவிக்க
தந்திரியைவைத்துமறைந் தாயேநீதான்

ஈஸ்பரி கவி.

கங்கையும்கதிரோன்தன்னை கர்த்தருக்களித்தேனென்று
சங்கரர்கேழ்வியாலே சாட்சியும்சொல்லவந்தாய்
பங்கயன்பிர்ம்மதேவன் பரமருமுரைத்தபோதும்
நங்கையைநாதருக்குநான் ஓட்டவைத்திடேனே

வசனம்.

கேளும் கலைக்கோட்டு மகாமுனிவரே கதிரோனையும்கங்கையையும் சிங்கீசருக்கு நான் அளித்தேனென்று சாட்சி சொல்லவந்தாயல்லவா இன்னம் யார்வந்து யெனக்குசொன்னபோதிலும் இனிமேல் பவானியை பரமசிவத்தினுடைய சடாபாரத்தில் வைத்திருக்கும்படி ஒப்புவேனோ ஒன்றும் நடவாது நீர் வந்தவழியே பார்த்துக்கொண்டு நடவும் முனிவரே.

ரிஷி. ஆனல் அப்படியே போய்வருகிறேனம்மா தாயே

பொது வசனம்.

இப்படியாக பூமுலையம்மன்சொன்னபோது கலைக்கோட்டு ரிஷியானவர் பவானியம்மனிடம் வந்து சொல்வது

கலைக்கோட்டுரிஷி தரு.

என்னவிதிக்குவந்தாயோ பகிரதியே எதுவிதிக்குவந்தாயோ
நிர்ணயமாகயீசரை நிந்திப்பதுஞ்சரியோ
நீலிபூமுலையாள் கேலியுஞ்செய்கிறாள்
ஆலஸ்யம்செய்யாமல் அம்மணிநடவும் எ

பவானி தரு.

நடவும்நடவுமென்கிறாய்மகாமுனியே நாதரைநான்விடுவேனோ
விடையேறுமீசரை விட்டுவந்தேனேயானால்
வீரியாளெண்ணமும் சாரியாய் முடியுமே
பாரிலிருப்பவர்கள் கூரியேநகைப்பார் நட

கலைக்கோட்டுரிஷி தரு.

நகைப்பெல்லாம்கெலிப்பாகுமே என்பின்னால்வாரும்
சுகப்பசுவாயே நீயுமே
அகப்படுவாளீஸ்பரி ஆறுதினத்திற்குள்ளே
அருந்தணலாகிய அரனுமேவிழுவார்
இருந்திடாதிவ்விடம் யேகியேவாரும் ந

பவானி தரு.

வருவேன்உன்வார்த்தைக்கிசைந்து மகாமுனியே
வல்லவரையுங் கசந்து
இருங்கோள்சந்தோஷமென்று யீசர்முன்பாக்கின்று
இரையவர்க்கன்பனே உரைசெய்துவருவேனே
மறையறிந்துரைவனே அறிதிருஞாயமோ வரு

பவானி வசனம்

கேளுங் கலைக்கோட்டு மகாமுனிவரே பரமசிவத்துக்கு தெரிவித்து வருகிறேன் சற்றுநேரம்பொரும் முனிவரே.

ரிஷி வசனம்

அப்படியே தெரிவித்துவாரும் கங்காபவானியே

பவானி சிசபத்தியம்

கர்த்தனேகைலாசா உத்தமசீலனே
கலைக்கோட்டுமுனி ஆசிமம்சென்றுவாறேன்
சத்தியும்நீருமே சரசசல்லாபமாய்
சந்தோஷகரமாக வாழ்ந்திருப்பீர்
பத்தருத்திடவென்று சித்தத்திலெண்ணுநீர்
பாவையும்நீறும்மன மகிழ்ந்திருப்பீர்

உத்தமசிலரே ஒளிநிகரலோலனே
உமையவளும்நீருமா ஓங்கிவாழ்வீர்
எத்தனைநாளாகக் காத்திருந்தீர்
இப்பவும்கலைக்கோட்டுரிஷி ஆசிரமம்போறேன்
பெற்றதாய்தந்தையரும் புருஷனில்லை
பேதையான்போய்வாரேன் வாழ்குவீரே.

பவானி வசனம்.

கேளுமையா சுவாமி லோகநாயகா தாங்களும் பூமுலையம்மனும் என்னை இந்தகெதியில் விடவேண்டுமென்று எத்தனை நாளாக காத்திருந்தீர் எனக்கு தாய் தந்தையர் ஆதரவுமில்லை தங்களாதரவுமில்லை இப்பவும் நான் கலைக்கோட்டு ரிஷியினுடைய ஆசிர்மத்துக்குப் போய்வருகிறேன் பிராணநாயகா.

சிங்கீசர் கவி.

மதிமுகவதனியானமங்கைஎன் கங்கையாளே
விதியதுவந்தபோது விலக்கவும்ஆராலாகும்
சதிசெயுமீஸ்பரிக்கு தான்சொல்லநீதியுண்டோ
ததிரிஷிஆசிர்மத்தில் தயங்காமல்நடத்திடாயே.

வசனம்.

கேளும் எனது உயிருக்கு உயிராயிராநின்ற பவானியே விதியும்பெரிதல்ல மதியும் பெரிதல்ல இதைவிளங்கும்படி என்னுலாகும் இப்போது நான் என்னசொன்னபோதிலும் பூமுலையாளுக்கு மனமிறக்கமில்லை ஆகையால் நீ கலைக்கோட்டு ரிஷியினுடைய ஆசிர்மத்திற்குப் போய்வாரும் நான் முன்னுலிருந்ததுபோலவே என் சடாபாரத்தில் இருக்கும்படியாகச் செய்கிறேன் நீ போய்வாரும் பவானியே.

பொது வசனம்.

இவ்விதமாக பவானியம்மன் பரமசிவனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு கலைக்கோட்டு ரிஷியினுடைய ஆசிர்மத்தில் வந்திருக்கும்போது பரமசிவமானவர் யீஸ்பரியைபார்த்து சொல்வதுகாண்க

சிங்கீசர் தரு.

இந்தப்படிசெய்யலாகுமோ அந்தரியாளும்
யேங்கியே நடக்கலாகுமோ
சுந்திர அமுர்தவஞ்சி சொல்லுறேன்உந்தனைக்கெஞ்சி
சிந்தையும்மகிழக்கொஞ்சிதோகைவரக்காண்பார்மிஞ்சி  இ

ஈஸ்பரி தரு

வந்தயென்னைநிந்தைசெய்குறீர் சர்வேஸ்பரரே
அந்தரியேல் ஆசைவைக்குறீர்
சந்திரசடாதரரே சொந்தமில்லையென் றுரைத்து
சிந்தைமகிழ்செஞ்சடைமேல் பந்துபோலெடுத்துவைத்தீர் இ

சிங்கீசர் தரு

இன்னமுந்தயவுயில்லையா எங்கன்மீதினில்
எரிதணலாகுதே தொல்லையே
பன்னும்பவானியானவள் என்னைவிட்டுப்போனபோது
தன்னலேதணலாகுதே உன்னுடன்உரைத்தேன்மானே இ

ஈஸ்பரி தரு.

சொன்னசொல்மறந்திடுவேனே சுந்தரேசாநீரும்
என்னுடன் சொல்லுவதேதே
கன்னியைக்கலந்திருந்தால் உன்னிடதணலாகுமோ
இன்னமேனிங்கிருக்கிறீ ரோகுவீர் அவளண்டைக்கு சொ

சிங்கீசர் கவி

ஆழியின்சுவாலையாலே அருந்தணலாகுகிப்போ
எமைபோல்உன்னைக்கெஞ்ச யிதக்கமுமில்லமானே
சூழ்ந்திடும்கெங்கைபோக சோருதேதிரேகமெல்லாம்
மொழிவதைதடுத்தாய்மானே மூர்ச்சையுமாகினேனே.

வசனம்.

கேளும்பெண்ணே உமையபார்வதாகங்கையானவள் என்னைவி ட்டுப் போனபோது ஆழியின் தணலானது மேலிட்டு திரேகமானது தாங்கவில்லை நான் இதக்கமான வார்த்தைகள் சொன்னபோதிலும் தடுக்கிறாய் எனக்கு தன்னைமீறி மெய்மறந்துபோகிறதே என்னசெ ய்வேன் பெண்ணே உமையபார்வதா.

பொது வசனம்

இவ்விதமாக பரமசிவமானவர் பூமூலையம்மனிடம் சொன்னமா த்திரத்தில் அம்மன் அதைக்கேளாமல்தடுக்க பரமசிவத்துக்கு ஆழி யின்தணலானது மேலிட்டு தன்னைமறந்து மூர்ச்சையாகி இருக்கும் போது பூமூலையம்மன் சுவாமியின் அருகினில்வந்து எழுப்புகிற வி தங் காண்க.

ஈஸ்பரி- தரு.

சோபமேமனஸ்தாபமோ-சிவன் சொக்குவித்தையோ அறிகிலேன்
காபகமேதுகெங்கைமீதினில் கர்த்தனேநினைவதையறிகிலேன்

தாதியேசிவசர்வேஸ்பரரும் தங்கினதோராயாசமோ
சப்தரிஷிகளின்பத்தினிகளை தபங்குலைத்தசோபமோ
அஞ்சலாக்ஷிஓர்வண்ணான்மகள்தனை அருகில்வைத்தஆயாசமோ
ஆலகாலவிஷத்தையுண்டதால் ஆதிசேஷன்மேல்கோபமோ
மீறிதிரிபுராட்சதர்களை கூறிஎதிர்த்ததோர்தாபமோ
வீ...த்திரனதக்கனுக்காக விட்டதோராயாசமோ

ஈஸ்பரி கவி.

தாதியேஅம்புசாட்சி சங்கார்மூர்ச்சையானார்
காதகசக்காளத்தி கங்கையின்சாபந்தானோ
சீதரன்செய்தசூதாஞ் செய்கையும்அறிகிலேனே
ஆதமில்லாபாவியாகினே னென்னசெய்வேன்.

வசனம்

ஆரகரா சிவசிவா காளகண்டதிரிநேத்திரா எனது பிராணேச ருக்கு என் சக்காளத்தியான பவானியானவள் இட்டசாபமோ சீத ரன்செய்த சூதோ பரமசிவன் மூர்ச்சையடைந்தார் இனிமேல் யாரி டத்திலே இந்தசேதியை தெரிவிக்கலாம் தோழிமார்களே

தாதி-தரு-ஜம்பை.

அண்டாண்டபிர்ம்மாண்டம் அனைத்துமொன்றாயிடிந்தபோதும்
அன்பருக்குதுன்பம்அணிகிடுமோ அந்தரியேயிது ஆயாசம்

ஈஸ்பரி தரு.

ஆயாசமானவருக்கு அடங்கிடுமோசுவாசங்களும்
நேயருக்குதிரேகமெல்லாம் நீராதுபோலாகிடுதே

தாதி தரு

கதிரவன் ஊஷ்ணத்தினால் களைத்தாரம்மாகாளகண்டர்
பதரவேண்டாமீஸ்பரியே பின்சகனும்எழுந்திருப்பார்

ஈஸ்பரி தரு

மதிபெருகும்கங்கைசெய்த மாயமம்மா அஞ்சலாட்சி
சதிகாரிசெய்தசூகே சங்காருமூர்ச்சையானார்

தாதி கவி.

கங்கையை அழைத்துவந்து காத்தர்செஞ்சடையில்வைத்தால்
சங்கரரெழுந்திருப்பார் தணித்திடுஞ்சுவாலையம்மா
தங்கியேயிருந்தோமானால் சர்வேசர்பிழைக்கமாட்டார்
பொங்கியகோபநீங்கி பொருத்துநீஅழைத்திடாயே.

வசனம்.

கேளுமம்மா செகதீஸ்பரி இனிமேல் நாம் சும்மாயிருந்தால் சர்வேஸ்பரன் பிழைக்கமாட்டார் உன்னுடைய கோபத்தை தணித்து பவானியிடம்சென்று அழைத்துக் கொண்டுவந்து சர்வேஸ்பரருடைய சடாபாரத்தில்வைத்தால்மூர்ச்சைதெளிந்து எழுந்திருப்பார் நாங்கள் இவ்விடத்தில் பதனமாக சுவாமியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் போய்வாருமம்மா தாயே.

ஈஸ்பரி தரு.

போய்வாறேன் அஞ்சலாக்ஷிநீங்கள்போற்றி
 சிவனைக்காத்திருப்பீர்
காயாம்புவண்ணன்மகள் தன்னைக்கண்டு
 கங்கைதனைக்கொண்டுவாரேனிப்போ
அண்டபகிரண்டங்களுப்-நான்
 அரிதாகியதபம்செய்திருந்தேன்
தொண்டருக்குதொண்டரான-சிவன்
 சோதித்து இடபாகந்தந்தாரே
கலைமுனி ஆசிர்மத்தில்-அந்த
 கங்கையாள்சென்று தங்கியிருப்பாள்
நிலைபதிந்தேயழைத்து-வருகிறேன்
 நேசர்விஸ்வாசரைக்காத்திருப்பீர்
பகிரதியாள் தனக்குநாளும்
 பழிக்காரியாகியேநின்றேனையோ
நிகரில்லாதேசுவாளோ-அந்த
 நீலிபழிதனைப்போடுவாளே போய்

பொது கவி.

கலைக்கோட்டுமகாரிஷியின் ஆசிர்மத்தில்
 கமலாட்சிதேடியங்கு வந்தபோது
நிலையுடனே தபம்புரிந்து வரங்கள்பெற்ற
 நேயமுனிசண்டுமனங்களித்தெழுந்து
கலைமதியுங்கங்கையற்கு நற்காலமென்றும்
 கருதியவர்தானினைந்து ஓடிவந்து
நலமுடனேஉமையவளை நமஸ்கரித்து
 நாயமுடன்கியானமதை வோதுவானே.

வசனம்.

இவ்விதமாக பரமசிவன் மூர்ச்சையாகி யிருக்கும்போது உமையபார்வதி தனதுதாதிகளை காவல்வைத்து கலைக்கோட்டு மகாரிஷியி

ன் ஆசிர்மந்தேடி வருகும்போது கலைக்கோட்டுரிஷியறிந்து யெதிர்ச் சென்றழைத்து பரமேஸ்பரியைப் பார்த்துச் சொல்வது.

கலைக்கோட்டுரிஷி தரு.

அன்னை வந்தனம் யென்னிருப்பிடம்நாடி எனைத்தேடி
அரனைவிட்டுவந்ததேது ஒய்யாரி எனைக்கோரி

ஈஸ்பரி தரு.

கன்னலன் லக்ஷணத்தால் களைத்தார்யீசர் இளைத்தார்
கலைக்கோட்டுமுனிவனேகளைதெளிந்திடப்பாரும்வழிகூறும்

கலைக்கோட்டுரிஷி தரு.

உலகிலோர்சிவன்நிலைகள் தப்பினலம்மா இதுசும்மா
அதில்ஒடுங்கும்பலபலசீவராசிகள் ஒழியும்உலகமழியும்

ஈஸ்பரி தரு

மேருவாழ்பவர்மீதில் சுவாசங்களில்லை வரவில்லை
மேனியன்மகள்பவானியுடனே நீர்வாரும் வந்துபாரும்

கலைக்கோட்டுரிஷி கவி.

பவானியைஅழைத்துவந்து பாருமென்றுரைத்தாயே
கவனித்துஅழைத்தேனுகில் கங்கையும்வருகுமோதான்
ஒவ்வீநீஅழைத்துவந்தால் உலகெலாம்களிப்பதாகும்
சிவ்வென்றுஆசிர்மத்தில் சீக்கிரம்செல்லுவாயே.

வசனம்.

கேளுமம்மா செகதீஸ்பரி பவானியை அழைத்துவாருமென்று சொல்லவந்தாயே நான் அழைத்துவருகிறது சரியல்ல நீர்சென்று பவானியை அழைத்துவந்தால் இவ்வுலகமெங்கும் புகழியாகும் போய்வாருமம்மா தாயே.

ஈஸ்பரி தரு

தமையன்மகள்தன்பனையைத்தேடி சங்கரிநடந்தாள்
சர்வேஸ்பரர்இடரைத்தீர்க்க தங்காமல்நடந்தாள்
இமையோர்முனிவர்கள்வாசம்செய்திடும் இடமதைகடந்து
யேகிபன்னகசாலைவாசலில் யீஸ்பரியும்நின்றாள்
அண்ணன்மகளாரே-உந்தன் அத்தையும்வந்தேன்
அரனுந்தணலாயெரியுந்தோன்றி அடைந்தார்மூர்ச்சையாய்
கண்ணன்செஞ்சடைமீதிலிருந்தால் கானல்தணிந்திடுமே
கடவுள்மூர்ச்சைதெளிந்தெழுந்தால் கல்யாணம்நடந்திடும் த

பொது வசனம்.

இப்படி யீஸ்பரியானவள் கலைக்கோட்டு மகாரிஷி சொன்னமாத்திரத்தில் பவானியம்மன் அரண்மனைக்குவந்து சற்றுநேரம் வாசற்படியருகில்நின்று உமையபார்வதி சில வார்த்தைகளை வசனிக்கும்போது பவானியம்மன் யீஸ்பரி இவ்விடம்வந்த காரணமென்னவென்று சொல்லுவது.

பவானி ஈவி

அத்தையேவாரும்வாரும் உன் அடிபிணை போற்றிசெய்தேன்
சுத்திநான்பணிந்தேனென்று சூழ்ந்துநீவீற்றிராதே
உத்தமரிஷிஆசிரமம் உன்னதேயென்னதல்ல
பித்தனுமுனக்குசொந்தம் பேசாமல்நடந்திடாயே.

வசனம்.

சரணம் அத்தையாரே உன் பாதாரவிந்தங்களுக்கு அனேகவந்தனம் நீயென் அரண்மனைநாடி வந்தபடியால் மரியாதை குறைவாகாமல்பணிந்தேன் இப்பவும் எனக்கும் உனக்கும் இந்தவீடு சொந்தமல்ல வித்தகனாகிய பரமசிவம் உனக்கு சொந்தம் எனக்கு சொந்தமில்லை இந்நேரம் கலைக்கோட்டுரிஷியறிந்தால் அவர்களுக்குள்ளாக கூடிக்கொண்டார்களென்று பேதகமாக எண்ணுவார் நீ உன் எதாஸ்த்தானம் போய்வாரும் பூமுலையே.

ஈஸ்பரி தரு

அய்யய்யோயிது — அரனார்செய்தசூதோ-என்
ஆணுவமெல்லாம் — அடங்கியிருக்கலாச்சே
சு. அங்கம்பதருதே — கெங்கைசெய்ததால்
சங்கையற்றுநான் — இங்கேவந்தேனே அ

பவானி தரு

ஓரகாரப்படுநீலி — என்னை
ஒட்டிவைத்தாயே — சிமாலி
சு. கோரமுள்ளவளானால் — குடிசைக்குள்வரலாமோ
தீரங்கொண்டுவந்த — சேதிதெரிகிலேன் ஓ

ஈஸ்பரி தரு

சேதியறிந்துதெருவில் — விட்டுவாண்ணுது
சிங்கிசர்முடிமீதில் — தங்கியிருக்கவாராய்
சு. செங்கதிர்தணலாலே — சிவனுமே
தங்கிமூர்ச்சையாய் — தவறிவிழுந்தாரே சே

பவானிதரு

மருந்திட்டுமணவாளனைக் கொண்டிங்கேவந்தாயே
எரியுதேவயிறுயிசர் இறந்தனரென்றால்
எப்படிபிணத்தைப்போட்டு ஒப்பிவந்தாய்நீயும் ம

கலைக்கோட்டுரிஷி கவி.

பதருதேபகிரதியேஉன் வார்த்தைபோலே
பார்வதியுமிவ்விடத்தில் வரத்தகாது
மதியாதவாசலது தள்ளியேதான்
மிதியாமலிருப்பவர்கள் அனேகருண்டு
சதிசெய்தாருரவாடி வந்தபோது
தானழைத்துஉபசாரம் செய்யவேண்டும்
எதிரியாய்சஸ்பரியைத் தள்ளலாமோ
இதுபோதும்இந்தமட்டி லிருந்திடாயே.

வசனம்.

பதருதேபதருதே பவானியே இந்த மட்டிலேயிரும் உமய பார்வதியம்மை நம்மிடம்வர நாம் என்னதபம் செய்தோமோ மதியாதவர்வாசல் மிதியாதிருப்பதே நீதியாகும் அப்படிவந்தபோது நாம் மதியாமல் இருப்பது நீதியல்ல, இப்பவும் திரோணகிய சூரியனுடைய வுஷ்ணத்தினால் பரமசிவமானவர் சோர்ந்து மூர்ச்சையடைந்தாராம் அவ்விடம் செல்லுவோம் வாருமம்மா பவானியே.

பவானி தரு

மயேஸ்பருக்கு மருந்திட்டுக்கொன்றாளே முனியே
மாசக்கண்ணிசெய்த மோசத்தையென்சொல்வேன் முனியே

கலைக்கோட்டுரிஷி தரு

மோசமில்லைவாரும் ஏகுவோம்நாம் பாகதியே
செகதீஸ்பரிபின்னாலே யேகியறியலாம் பகிரதியே

பவானி-தரு

தந்தைதாயறியாமல் வந்திடஞாயமோ முனியே
சுந்தரிபின்னாலே தந்தரிவரலாமோ முனியே

கலைக்கோட்டுரிஷி தரு

உந்தன்தந்தைவார்த்தை உண்மையறியலாம்திர சேயகி
சிந்தையமகிட்சியாய் ஸ்ரீவைகுந்தம்செல்வோம் பகிரதியே

கலைக்கோட்டுரிஷி விருத்தம்.

பகிரதியேவைகுந்தம் வந்தோமிப்போ
பரந்தாமன் உன் தந்தை யிருப்பிடத்தில்
நிகரில்லாசிம்மாதனத்தி லிருக்ககண்டோம்
நேயரிடபாகமதை போற்றிசெய்து
திகம்பரியேவந்ததொரு சேதிதன்னை
செப்பியேமருமொழிக ளறியவேண்டும்
சுகந்தருஞ்சிதரனே அடியேன்போற்றி
சூழ்ந்துவருப்சேதிதன்னை அறிந்திடீரே.

வசனம்.

சரணம் சரணமையா சுவாமி வைகுந்தவாசகரே அடியேன்தங் களுடைய பாதங்களுக்கு சரணம் சரணமையா சுவாமி.

மகாவிஷ்ணு தரு.

வாரும்வாருமப்பா கலைமுனியேநீ
வந்தசேதியைக்கூறும் நிலையுடனே

கலைக்கோட்டுரிஷி தரு.

கூறுவேன்ஒருசேதி ஸ்ரீமுகுந்தனே
கொத்தவாசிங்கீசர் மூர்ச்சையாகினாராம்

மகாவிஷ்ணு தரு.

மூர்ச்சையானவிதமென்ன சிங்கீசநாதரும்
மூவரும்வந்ததென்ன தந்திரிமாதரும்

கலைக்கோட்டுரிஷி தரு.

உச்சிதமானாரொரு விதமறிகிலேன்
உமையவள்பூமுடிசொன்னால் உண்மைதானையா

மகாவிஷ்ணு கவி.

பூமுடிஎந்தன் தங்கை பொங்கான்களைத்தாரென்று
நேமமாய்வந்ததாலே நிச்சயமில்லையிப்போ
சோமசிங்கீசநாதர் சேர்ந்தாலும்ஒருகுண்டம்
வேள்வியும்உலகமேது அழிந்ததுபோகுமேதான்.

வசனம்.

கேளுங் கலைக்கோட்டுரிஷியே சிங்கீசர் மூர்ச்சையடைந்தாரென்றால் உலகத்தில் இருக்கப்பட்ட சீவாத்மாக்களும் தானதண்டம் சிபம் தபம் ஓமங்கள் இது முதலானதும் அழிந்துபோய்விடும்கேளும்தங்கையே நீ யிவ்விடத்தில் யேதுகாரணமாக வந்தாய் தெரியச் சொல்லுமம்மா தாயே.

ஈஸ்பரி சீசபத்தியம்.

செய்யசெகஆனந்த ஸ்ரீஅரிதமயனே
சிங்கிசர்மூர்ச்சையது உண்மையாகும்
நான்செய்தகுற்றமதை உன்சிந்தையிலெண்ணுமல்
சிவனிடம்செல்லவே வாரும்அண்ணு
உயிர்முனிபவானியும் உந்தனைக்கண்டுமே
நீர்ஒப்பினல்அவரிடம் வருவனென்றுள்
பயமாகுதென்மனம் பட்சம்வைத்தேகுவீர்
பரமரும்என்னமா கொண்டுசென்று
மேன்மையாய்சடைதன்னில் வைத்தால்நன்று
வையகம்தானறிய மணமும்செய்வேன்
மனமகிழ்ந்து பவானியுடன்வருகுவீரே

வசனம்.

கேளும் அண்ணுவே கதிரோனுகிய வுஷ்ணத்தினுல் மெலிந்து போக எங்காயகர் மூர்ச்சையடைந்தார் நான் பயங்கரமாகிய பவானியிடஞ்சென்று அழைத்தேன் தங்களையறியாமல் வரக்கூடாதென்றுள் அதற்கு கலைக்கோட்டு மகாரிஷி சமாதானம்செய்து பவானியையும் என்னையும் தங்களிடம் அழைத்துவந்தார் நான்செய்த குற்றமெல்லாம் பொருத்து லோகநாயகரிடம் வாரும் அண்ணுவே.

மகாவிஷ்ணு தரு.

என்னுவிதிவருமோ அவ்விடம்வந்தால்
யேதுகெதி தருமோ
பன்னும்பவானியரை பரமன்முடியில்வைத்து
மன்னரையெழுப்பினுல் மதிமோசம்நேருமோ என

ஈஸ்பரி தரு.

மன்னர்தவறினுலும் உலகமுண்ட
மகாதேவர் பிரண்டாலும்
கன்னியாள்வார்த்தையும் வின்னப்படப்போகுமோ
சொன்னபடிமணமும் செய்திடுவேனண்ணு ம

மகாவிஷ்ணு தரு.

ஆகாயம்பூமிகளும் சத்தரிஷிகள்
அனைவரும் தானறிய
பாகரிசிவனும்யெழுந்து யேழரைக்குள்ளே
சேகரர்மணஞ்செய்வே னென்றுசத்தியம்கூறும் ஆ

ஈஸ்பரி தரு.

நிகருள்ளவாரிதிகள் சுவரினாலும்
நேமம்பிரண்டிட்டாலும்
திடமுடன்மணங்களை செய்வேனிந்தாசத்தியம்
தமையுடனேநீயும் சலுதியில்நடந்திடும் நிக

மகாவிஷ்ணு வசனம்.

அகோகேளுந் தங்கையே சிங்கீஸ்பாருக்கும் பவானியம்மனுக்கும் விவாகம் நடப்பதாக உருகிமொழி தந்தபடியினால் இகோ சிங்கீஸ்பாரிருக்கப்பட்ட எதாஸ்தானத்தில் வந்துசேர்ந்து விட்டோம் இனிமேல் நடக்கவேண்டியதை நடத்துமம்மா தங்கையே

ஈஸ்பரி விருத்தம்

வாருமடி அஞ்சலாக்ஷி பவானியரை
வரவழைத்து வந்தோமடி
பாருமடிலோகநாதர் முடையின்மீதில்
பரகதியை வைப்போமடி
வைபோகஇந்திர்சுகம் யினிமுதலாய்
வாழ்வெல்லா முன்னுதம்மா
மைவிழிமாதர்களே இனியெனக்கு
மங்கிலியமிருந் தால்போதும்
கெங்கைகூடந்தங்கமாகும் அவனிதன்னில்
கீர்த்திகளு மேன்மையாகும்
கங்காபவானியரே இதுமுதலாய்
சுவுக்கியம் பெற்றுவாழ்வீர்
மங்கிலியந்தான்முடிப்பேன் இவரெழுந்தால்
தங்கையரே வீற்றிருப்பாய்
சங்கரரைத்தானறிந்து சீதரன்கங்கை
தரணிதனில் புரண்டழுவாள்.

மகாவிஷ்ணு கவி.

பார்த்தைாமகளேநீயும் பரமநுமூர்ச்சையானர்
சூஸ்திரமாகநம்மை துளைத்துமேஅழைத்துவந்தார்
கார்த்திருந்தாளேஉன்னை கங்கையேவேரறுக்க
ஆத்திரமில்லாமல்தான் அரனுமேவிழுந்திட்டாரே.

வசனம்.

கேளும்யென்செல்வமே சிங்கீஸ்பாரை உமையவள் கொன்றுவிட்டதுமல்லாமல் நம்மையும்தந்திரமாக அழைத்துவந்துஇந்தகொடுமையைப்பார்க்கும்படி செய்ததே இனிமேல்சிங்கீஸ்பார்எழுந்திரு

க்கப்போகிறதுமில்லை இந்த கொடுமைக்கு நான் ...ன்னசெய்குவேன் என்மகளே.

பவானி தரு.

பாதந்தனில்பிறந்து நாதன்முடி மீதிருக்க
நான்-பட்சம்வைத்திருந்தேனே தந்தையரே

மகாவிஷ்ணு-தரு.

பேதகமாகஎண்ணிப பிரித்துஎன் தங்கையரும்
சூதுகினைந்ததையோ என்மகளே

பவானி தரு.

அண்ட இடமுமில்லை ஆதரிப்பாராருமில்லை
அநாதியாய்நின்றேனையோ தந்தையரே

மகாவிஷ்ணு தரு.

கண்டார்உனக்குதாலி கட்டிடசொந்தமேது
கலங்கவும்நீதியுண்டோ என்மகளே

சுஸ்பரி கவி.

சூரபிமானமுள்ள துலங்கியகங்கையாளே
பாருமுன்தங்கைநீயும் பழிதனைப்போடவேண்டாம்
ஏரும்நீசடாபாரத்தி லெரிதணலவிந்ததானல்
காரணரெழுந்திருப்பார் கங்கையேயிருந்திடாயே.

வசனம்.

கேளுமம்மா பவானியே, நமது லோகநாயகரை நான்கொன்றுவிட்டேனென்று என்பேரில் பழிவேண்டாம் இப்போது முன்போலே நீசடாபாரத்தில் வீற்றிருந்தால் சுவாமிக்கு மூர்ச்சைதெளிந்துதணிந்து எழுந்திருப்பார் வாருமம்மா.

பொது-கவி.

சங்கரிகங்கையாளை சடாபாரந்தனல்கிருத்த
கங்குலுநீங்கிமூர்ச்சை கடவுளுந்தெளிந்தெழுந்து
அங்கமும்புளகமாகி அம்மன்மேலன்புதோன்றி
நங்கைபூமுடியாளோடு நாதருமுரைசெய்வாரே.

வசனம்

இவ்விதமாக உமையபார்வதிதேவியார் பவானியைக்கொண்டுபோய் லோகநாயகர் சடாபாரத்தில் சேர்த்தவுடனே மூர்ச்சைதெளிந்து எழுந்ததுபோலவெழுந்து பார்வதியைப்பார்த்துசொல்லுகிற விதங்காண்க.

சிங்கிசர் தரு-ஜம்பை.

நித்திரையில் என்முடியில் நேரிழையாள் கங்கையளை
வைத்தவரார் கொண்டுவந்து வந்தவிதங் கூறும்.

ஈஸ்வரி-தரு-ஜம்பை.

உத்தமரும் சோர்ந்தீரென்று மெத்தபயங் கரமாகி
கர்த்தாமீ திருக்குங்கங்கை தன்னைவைத்தேனையா

சிங்கிசர்-தரு.

அரியயன் அஷ்டபாலர் அனைவர்களுங் கனமுடனே
சரியாகநிரைந்தவிதம் தானரியஉரைப்பீர்

ஈஸ்பரி தரு

நெறியுடனே கெங்கையற்கு நிட்சயங்கள் தந்துவிட்டு
வருமணங்கள் செய்வதற்கு வரவழைத்தேன் சுவாமி

சிங்கீசர்-தரு.

நேத்துபட்ட துன்பமெல்லாம் காத்துதன்னில்தூத்தினையோ
பார்த்திருந்தும்பகிரதியை சேர்த்துமணஞ்செய்வேனே

ஈஸ்பரி-தரு.

உத்தமரேவைகுந்தற்கும் உலகிலுள்ளதேவருக்கும்
சத்தியங்கள்செய்துவந்தேன் தந்திரியைமணஞ்செய்வீர்

சிங்கிசர் தரு.

கம்பத்தில்இரண்டானை கட்டினதுபோதும்போதும்
வம்புவழக்கிடவேண்டாம் நம்பினதுபோதும்போதும்

ஈஸ்வரி தரு

நம்பிவந்தநாயகியை நட்டாற்றில்விடவேண்டாம்
அம்புவியில்படுந்துயரை ஆதரியும்சுவாமி

பொது வசனம்.

இவ்விதமாக சிங்கீஸ்பரரும் பூமுலையம்மனும் சம்வாதம் செய்துக்கொண்டிருக்கும்போது அருகாமையிலிருந்த மகாவிஷ்ணுவானவர் அதையறிந்து தேவர்களைப்பார்த்து சொல்வது.

மகாவிஷ்ணு விருத்தம்.

சதுர்பெருகும் சதாசிவத்துக் கதிகம்போன்ற
சத்தியது வாக்கியங்கள் தவறிப்போச்சே
நதிபெருகும் சந்திரசூரியர்களேது
நட்சத்திரமண்டலம் நாலுலகமேது
முதுமறையோர் வேள்வியது முடிப்பதேது
முச்சுடர்கள் இனியோங்கி யெரிவதேது
சுதாகரிக்கி தங்கைமண முடிப்பதேது
சொல்லாமல் நடப்பதுவுங் கிரமந்தானே.

வசனம்.

கேளும் மாதவர்களே முனிவர்களே சதாசிவமாகிய சிங்கீசருக்கு அதிகம்போன்ற சத்தியாகிய உமைய பார்வதியினுடைய வாக்கியமானது தவறிப்போச்சுது இன்றுமுதல் ஓமம் செபம் தபம் நேம நிஷ்டையேது சந்திர சூரியர்களால் உலகத்தில் முச்சுடராகி யிருப்பதும் அழிந்துவிடும். இனிமேல் நாம் இவ்விடமிருந்தால் மரியாதை குறைவாகும் சொல்லாமல் அவாளவாள் எதாஸ்த்தானம் நடப்பது கிரமமாகும் தேவர்களே.

ஈஸ்பரி-தரு.

போகவேண்டாம்வாரும் அண்ணா-நீரும்
பொருப்பீர்மணமுடிப்பேன் அண்ணா

மகாவிஷ்ணு-தரு.

மணங்கள்முடிப்பதேது தங்கையரே-இப்போ
மயேசர்ஒப்புக்கொள்ளுவதேது தங்கையரே

ஈஸ்பரி-தரு.

பிராணேசரையறிந்துவாரேன் அண்ணாவே-அவர்
பின்னிடைந்தாலும்உயிரை தாரேனண்ணா

மகாவிஷ்ணு-தரு.

உயிரைக்கொடுத்தால்மண மாகிடுமோ-தங்கா
உத்தமர்க்குசிறப்பாமோ நீயுரைப்பாய்

சஸ்பரி விருத்தம்.

ஒப்பியதோர்உந்தனுக்கு தங்கவார்த்தை
ஒருக்காலும்பிசகாது உண்மைதந்தேன்
செப்பியதோர்சிவபெருமான் ஒப்பாவிட்டால்
சீவனுயிர்உந்தனுக்கு தருவேனண்ணு
எப்படிதான்பிசகிடுமோ யறிந்துவாரேன்
இருந்திடுவீர்யேகிடவும் வேண்டாம்நீரும்
முப்புரத்தைநகைத்தெரிந்த லோகநாதருக்கு
முடித்திடுவீர்கங்கைமணம் நடத்துவீரே.

வசனம்.

கேளும் அண்ணாவே உமக்குச்சொன்ன உறுதிமொழியாவது இனி பிசகி நடக்கப்போகிறதில்லை அப்படி தவறினல் என்னுடைய உயிரைத்தருகிறேன். சற்றுநேரம்பொருப்பீர். கேளுமையா சுவாமி பிராணநாயகரே பவானியம்மனுக்கும் தங்களுக்கும் விவாகநடத்துவதாக நான் உத்தேசித் திருக்கின்றேன், கங்காபவானியை விவாகம் நடத்துமையா சுவாமி.

பொது வசனம்.

இவ்விதமாக பரமேஸ்வரியினுடைய மனோ இஷ்டத்தின் பிரகாரம், முக்கண்தாரியாகிய ஸ்ரீகைலாசபதிக்கு பவானியம்மனை விவாகம் நடத்திவைத்து மகாவிஷ்ணுவானவர் வைகுந்தஞ்சென்றார், இப்பால் பரமசிவமும் உமைய பார்வதியும் பவானியும் கைலாயம் சென்றார்கள்.

---

இந்த நாடகம் பாடினோரா ஆடினோர் கேட்டோர்

நாலாம் பதவியைச் சேர்வார்கள்.

மங்களம்.

சிங்கீசநாதருக்குஞ் ஜெயமங்களம் - எங்கள்
தேவிபூமுலையாட்குஞ் சுபமங்களம்

கங்கைதங்கைநாச்சியர்க்கும் நாராயணன்லட்சுமிக்கும்
தங்குங்கணேசருக்குஞ் செங்கைவேல்முருகருக்கும் சிங்

மறையவன்வேதனுக்கும் மாதுகலைவாணியர்க்கும்
குறைவில்லாத்தேவர்கட்குங் கலைக்கோட்டுமாமுனிக்கும் சிங்

நீதிசெய்யரசர்க்கும் நெடியவுலகத்தோர்க்கும்
ஆதியடியவர்க்கும் அம்மைதுர்க்காதேவியர்க்கும — சிங்

நாடகமாடுவோர்க்கும் நன்றாய்ப்படிப்போருக்கும்
கூடவுதவுவோர்க்கும் குந்திகொஞ்சிகேட்போருக்கும் — சிங்

அச்சிட்டுதவுவோர்க்கும் அரியவிலைகூறுவோர்க்கும்
மெச்சியேவாங்குவோர்க்கும் மேதினியிலெல்லோர்க்கும் — சிங்

பலரைபாதுகாப்போருக்கும் பட்சமுள்ளபெரியோர்க்கும்
குலமோங்கச்செய்வோர்க்கும் குறிக்குஞ்சம்சாரிகட்கும் — சிங்

சீராய்நடப்போருக்கும் சிவனைமறவாதார்க்கும்
நாராயணாவென்பார்க்கும் நமனைவிரட்டுவோர்க்கும் — சிங்

சிங்கீசர் கலியாண நாடகம்.

முற்றிற்று.

---

148098
சென்னை-600 003.

உ

சிவமயம்.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சிவபராக்கிரமம் 64-படங்களுடன் | 2 | 0 | 0 |
| மஸ்தான்சாகிபுபாடல் மூலமும் உரையும் | 2 | 8 | 0 |
| பஸ்மமஹாத்மியம் | 0 | 4 | 0 |
| மகாசிவராத்திரி கற்ப முதலியன | 0 | 4 | 0 |
| கீசகவிலாசம் | 0 | 4 | 0 |
| சிங்கீசர் கல்யாண நாடகம் | 0 | 4 | 0 |
| மாங்கனி நாடகம் | 0 | 4 | 0 |
| கம்சசம்மார நாடகம் | 0 | 4 | 0 |
| தாருகாவன நாடகம் | 0 | 4 | 0 |
| கமலவல்லி நாடகம் | 0 | 4 | 0 |
| நரகாசுர நாடகம் | 0 | 4 | 0 |
| பத்மாவதி மாலையிடு நாடகம் | 0 | 4 | 0 |
| வள்ளியம்மை கல்யாண நாடகம் | 0 | 4 | 0 |
| சுந்தரகாண்டம் அனுமார்தூது நாடகம் | 0 | 4 | 0 |
| நடராஜர் சதகம் | 0 | 4 | 0 |

இன்னும் அநேக நாடகப் புத்தகங்கள் அச்சிட்டுக்கொண்டு வருகின்றனம் கூடிய சீக்கிரம் வெளி வரும்.

இப்படிக்கு,

அ. இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை.

২০৪
১৫.৪২